ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

25.03.2009 - மலர் 06, இதழ் 03

## கண்டங்கள் வழியே நாடுகளை அறிவோம்





புதிய பார்வையில் புதிய தகவல்கள்

Rs.25.00



## சிறுவர்கள் நமக்கும் சட்டங்கள் உள்ளன



## வித்தியாசமான முச்சக்கர வாகனம்



விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீருக்கடியில் பிரசவம்



பிரசவ காலத்தில் பெண்களுக்கு ஏற்படக் கூடிய வலியைக் குறைக்கும் ஒரு முறைதான் 'நீரியல் பிரசவம்' எனப்படுகின்றது. பெண்ணுக்குப் பிரசவ வலி எடுக்கத் தொடங்கியதுமே அவள் வெதுவெதுப்பான சுடுநீரில் குளிக்க வேண்டும் என பல ஆண்டுகளாக மூதாதையர்கள் கூறி வந்ததாகவும் மருத்துவ இதழ்கள் பல தெரிவிக்கின்றன. 1977 இல் டொக்டர் மைக்கேல் ஓடேன்ட் என்பவர் பிரான்ஸ் நாட்டின் பித்திவியரால் நகரில் உள்ள தமது மருத்துவமனையில் செயற்கையான ரப்பர் குளியல் தொட்டி ஒன்றை உருவாக்கி அதில் பிரசவ வலி எடுத்த பெண்களை இறங்கச் செய்து பிரசவம் பார்த்தார். இதனால், பிரசவ வலியின் வேதனை குறைந்துவிடுவதால் இம்முறை மிகவும் பிரபலமடைந்தது. இந்தத் தொட்டியில் உள்ள தண்ணீரின் வெப்பநிலை 36 டிகிரி செல்சியஸாகப் பராமரிக்கப்படுகின்றது. தண்ணீருக்குள் இறங்கி இருந்து கொண்டு பிரசவிப்பதால் வலி பெரிதும் குறைவதோடு உடம்பை மிகச் சுலபமாக இயக்கி குழந்தையை வெளியே கொண்டு வரமுடிகின்றது. மேலும், பிரசவ நேரம் இரண்டு மணி நேரமாகக் குறைகின்றது. பிரசவ நேரத்தில் கிருமித்தொற்றும் இல்லை.

இதுவரை 70 நாடுகளில் இந்த 'நீரியல் பிரசவ முறை' பின்பற்றப்பட்டுள்ளது. அண்மையில் சீனா இதில் 71 ஆவது நாடாகச் சேர்ந்துள்ளது.

**ஜெ.டிசோகுமார்**

# தாவர உணவு புற்றுநோய் அபாயத்தைக் குறைக்கின்றது

தாவர உணவுகள் புற்றுநோய் அபாயத்தைக் குறைப்பதாக விஞ்ஞானிகள் உறுதி செய்துள்ளனர். பிரித்தானிய ஆராய்ச்சியாளர்கள் 5,2700 ஆண், பெண்களிடம் நடத்திய ஆய்விலிருந்து மாமிச உணவு உண்பவர்களைவிட தாவர உணவு உண்பவர்கள் குறைந்தளவு அபாயத்தையே எதிர்நோக்குவதாக கண்டறிந்துள்ளனர்.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக வல்லுனர் ஒருவர் தலைமையிலான குழுவினர் அமெரிக்க





மருத்துவ சஞ்சிகையொன்றில் இதுபற்றி எழுதியுள்ள கட்டுரையில் இது ஒரு பெறுமதி மிக்க ஆய்வு என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த ஆய்வு பரந்த அளவில் வரவேற்கப்பட்டுள்ள நிலையில் தாவர உணவு மற்றும் பழங்களை உண்பவர்கள் குறைந்த அளவு புற்றுநோய் அபாயத்தையே எதிர்நோக்குவதோடு ஏனைய நோய்களைப் பொறுத்தவரையிலும் மாமிச உணவு உண்பவர்களைவிட குறைந்த அளவு அபாயத்தையே தாவர உணவு உண்பவர்கள் எதிர்நோக்குவதாகவும் தெரியவந்துள்ளது.

1990 ஆம் ஆண்டுகளில் 20 வயதுக்கும் 89 வயதுக்கும் இடைப்பட்ட ஆண், பெண்களிடையே நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றின்மூலம் மீன் உண்பவர்களும் தாவர உணவு உண்பவர்களும் இறைச்சி உண்பவர்களை விட குறைந்தளவு புற்றுநோய் அபாயத்தையே எதிர்நோக்குவதாக தெரியவந்தது.

**-சிலன்**

# 'கேக்' உருவானது எப்படி?




பிறந்தநாள் கொண்டாட்டம் மற்றும் விசேட வைபவங்களில் 'கேக்' முக்கிய இடம் வகிக்கும் கலாசாரம் பரவலாக உள்ளது. புராதன எகிப்திலேயே இக்கலாசாரம் முதன்முதல் ஆரம்பித்ததாக ஆதாரங்களிலிருந்து தெரிகின்றது. இனிமைமிகு பாண் வகைகளை தயாரிக்கும் முயற்சியில் இவர்களே முதன்முதலில் ஈடுபட்டுள்ளனர். அவர்களைத் தொடர்ந்து கிரேக்கர்கள் இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.



நிலவுக் கடவுளான ஆர்ட்டிமிஸுக்கு வட்டமான ரொட்டி வகைகளையும் தேன் கலந்து தயாரித்த கேக்குகளையும் படைத்து இவர்கள் வழிபட்டுள்ளனர். தாம் தயாரித்த கேக் நிலவை போல் ஒளிர வேண்டும் என்பதற்காக அதன்மீது மெழுகுவத்திகளையும் ஏற்றி வைத்தனர். மெழுகுவத்தி எரியும்போது எழும் புகை தங்களின் பிரார்த்தனைகளை சொர்க்கத்தில் உள்ள கடவுளர்களிடம் எடுத்துச் செல்லும் என்றும் அவர்கள் நம்பினர்.

சீனர்கள் அறுவடைக் காலத்தின் போது நிலவுப் பெண் தெய்வமான ஹெங் ஒவுக்கு வட்ட வடிவ



கேக்குகளைப் படைத்து வழிபட்டனர். ரஷ்யர்களும் வசந்தகால சூரியனைப் போற்றும் வகையில் வட்டவடிவ கேக்குகளைப் படைத்தனர்.

இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்ட கேக்குகள் கேக் என்று குறிப்பிடப்படவில்லை. 'மாவினால் தயாரிக்கப்பட்ட இனிப்புப் பண்டம்' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. கிரேக்கத்தில் தயாரிக்கப்பட்ட கேக்குகள் 'பிளேகூஸ்' (Plakous) என்றே அழைக்கப்பட்டன. இந்த கேக்குகளில் விதைகளும் தேனும் கலக்கப்பட்டிருந்தன.

ரோமானியர்களும் கேக்கை கடவுளுக்குப் படைக்கும் பொருளாகவே பயன்படுத்தியுள்ளனர். 17 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் கேக்கை இனிய வைனுடன் அல்லது தேனீருடன் சேர்த்தே உட்கொண்டுள்ளனர். 19 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் தொழில்நுட்ப முன்னேற்றமானது கேக் தயாரிப்பை இலகுபடுத்தியது.



20 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியிலேயே குடும்பத்தலைவிகள் வீட்டிலேயே சிறந்த கேக்குகளைத் தயாரிக்க ஆரம்பித்துள்ளனர். தற்காலத்தில் விசேட வைபவங்களுக்காக பல்வேறு விதங்களில் கேக்குகள் தயாரிக்கப்படுகின்றன.

**-ராஜா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றாகத் தூங்கினால் நீண்டநாள் வாழலாம்

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது நாமறிந்த பழமொழி. ஆனால், இன்று வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கு பணம் சம்பாதிக்கும் நோக்கில் உழைத்து உழைத்தே பலரும் பல்வேறுபட்ட நோய்களுக்கு ஆளாகின்றனர். ஆனால், ஓயாமல் உழைத்துக்கொண்டிருக்கும் உடலுக்குத் தேவையான ஓய்வினை அளிப்பதன் மூலம் நோயற்ற, ஆரோக்கியமான வாழ்வினைப் பெறமுடியும் என்று அண்மைய ஆய்வு முடிவொன்று கூறுகின்றது.

மனிதனுக்கு உணவு எவ்வளவு அவசியமோ, அதே அளவிற்கு நித்திரையும் அவசியமாகும். ஆழ்ந்த நித்திரையினால் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கின்றது. மூளையின் கிரகிக்கும் திறனும் அதிகரிக்கின்றது என்பதோடு, இருதயமும் சீராகச் செயல்படுகின்றது. பகலைவிட இரவு நேரங்களில் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகமாக இருக்கின்றது என்றும் பகலில் கடுமையாக உழைத்து விட்டு, இரவில் நன்றாகத் தூங்கினால் மறுநாள் காலையில் புத்துணர்ச்சியுடன் வேலை செய்ய முடியும் என்பதும் இவ் ஆய்வின் பின்னர் தெரியவந்துள்ளது. இதனை மேலும் உறுதிப்படுத்துவதற்கு அமெரிக்க விஞ்ஞானிகள் 200 மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களில் சிலருக்குப் புதிய வீடியோ விளையாட்டுக்களைப் பகல் நேரத்தில் கற்றுக் கொடுத்தார்கள். கற்றுக்கொண்ட வேகத்திலேயே நன்றாக விளையாடிய மாணவர்கள், 12 மணி நேரம் கழித்து விளையாட்டிலுள்ள ஆர்வம் குறைந்து, மிகவும் மோசமாக விளையாடுவது அவதானிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதே மாணவர்கள் இரவு நன்றாகத் தூங்கிவிட்டு, மறுநாள் காலையில் எழுந்து விளையாடியபோது முன்பு போலவே சிறப்பாக விளையாடுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தினமும் இரவில் குறிப்பிட்ட நேரம் உறங்குபவர்கள் இருதய நோயால் பாதிக்கப்படும் வாய்ப்புக் குறைவு என்று மற்றொரு ஆய்வு கூறுகின்றது. 35 வயது முதல் 47 வயதுக்கிடைப்பட்ட சிலரின் தூங்கும் நேரங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. 5 வருடங்களுக்குப் பின் அவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்து பார்த்தபோது, அவர்களில் தினமும் 7 மணி நேரத்திற்கும் மேலாகத் தூங்கியவர்களில் மிகக் குறைந்தளவினரே இருதய பாதிப்புக்கு ஆளாகியிருப்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.



# ஆரம்பக் கல்வி முன்னேற்றத்துக்காக அவுஸ்திரேலியா நிதியுதவி

இலங்கையில் ஆரம்பக் கல்வி முன்னேற்றச் செயற்பாடுகளுக்காக அவுஸ்திரேலியா 6 மில்லியன் அமெரிக்க டொலரினை வழங்கத் தீர்மானித்திருப்பதாக இலங்கைக்கான அவுஸ்திரேலியத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் நடைபெற்ற அவுஸ்திரேலிய பல்கலைக்கழகங்களின் கல்விக் கண்காட்சியில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையில் கல்வி ரீதியில் நெருங்கிய தொடர்புகள் நிலவி வருவதாகவும் அவுஸ்திரேலிய பல்கலைக்கழகங்களில் இலங்கையர்கள் பலர் கல்வி கற்றுள்ளதோடு, இன்றும் கல்வி கற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



இதேவேளை, இந்த உதவித் தொகையில் கூடுதலான பகுதி வடக்கு, கிழக்குப் பகுதிகளின் ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


விஜய்
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk


# சிறுவர் உரிமைகள் தொடர்பில் மாணவர்களுக்கு அறிவூட்டல்

சிறுவர் உரிமைகள் தொடர்பாக பாடசாலை மாணவர்களை அறிவூட்டுவதற்கான செயற்றிட்டமொன்றை கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.


கல்வி அமைச்சின் புதிய கல்வி மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் பாடசாலைப் பாடவிதானத்தில் சிறுவர் உரிமை ஷரத்துக்களை உள்ளடக்கும் வகையிலேயே புதிய பாடத்திட்டங்களில் இதனை உள்ளடக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



இது தொடர்பாக வலயக்கல்வி அதிகாரிகளுக்கு விளக்கமளிப்பதற்கான விசேட செயலமர்வொன்று அண்மையில் கல்வி அமைச்சில் நடைபெற்றுள்ளது.

# (உ/தர) விடைத்தாள் மீள் மதிப்பீட்டுக்காக 50 ஆயிரம் விண்ணப்பங்கள்

2008-ஓகஸ்ட்டில் நடைபெற்ற க.பொ.த (உ/தர) பரீட்சை விடைத்தாள்களின் மீள் மதிப்பீட்டுக்காக 50,000 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் பரீட்சை மீள் மதிப்பீட்டுப் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.



பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறத் தகுதியானவர்களின் தெரிவு நடவடிக்கைகளுக்காக விடைத்தாள் மீள் மதிப்பீட்டுப் பெறுபேறுகள் ஏப்ரல் மாத முதல் வாரத்துக்குள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணையகத்துக்கு கையளிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


தபால் மூல ஆங்கில பாடநெறி ENGLISH Course
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்தவாரே எம்முடன் இணைந்து ஆங்கிலத்தை சரளமாகவும் தெளிவாகவும் கற்றுக் கொள்ள முடியும்
* கிளாஸ் போகும் காலம் நேரம் மிகுதி / வீண் கட்டணங்கள் இல்லை
* குருகிய காலம் என்பதால் 1 மாதத்தில் பாடநெறியை முடிப்பதால் பயன் இல்லை
* அடிப்படையில் இருந்தே கற்றுக்கொடுக்கப்படும்
பாடநெறியில் இணையும் அனைவருக்கும் அழகிய பேக் ஒன்றும் Tigo Sim Card (தொலைபேசி இணைப்பு) ஒன்றும் வழங்கப்படும்
முதல் இணையும் 500 மாணவ/மாணவிகளுக்கு மாத்திரமே Tigo Sim ஒன்று இலவசம்
இந்த Diploma சான்றிதழ் உங்கள் கல்வித்துறை, மற்றும் தொழில் வாய்ப்புக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு துணையாக அமையும்
மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 15/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. Tel: 0773 123 523
மாற்று வழிகளிலோ, மறைமுகமான கட்டணங்களோ அறவிடப்படமாட்டாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவில் மலரும் மலர்கள்

**அதிகமாகக் காலையில் மலரும் மலர்களே எமது உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றன. எமது அவதானத்திற்கும் இலக்காகின்றன. எனினும், இரவிலும் சில மலர்கள் மலர்கின்றன. இந்த இரவுப் பூக்களும் ஏனைய மலர்களைப் போலவே சூழலை சுந்தரமயமாக்குகின்றன. இரவுப் பூக்களில் சில விசேட தன்மைகள், தனித்துவங்கள் காணப்படுகின்றன. இதனால், நாம் இரவுப் பூக்கள் குறித்த சில தகவல்களை ஆராய்வோம்**

வீட்டின் வரவேற்பறையிலும் பூஜை அறையிலும் இருந்த படங்களுக்கு மாலை சூட கமலா விரும்பினாள். சில பூமாலைகள் கோர்க்க வேண்டும், அதற்குத் தேவையான மல்லிகைப் பூக்களைப் பறிக்க வீட்டு முற்றத்திற்குச் சென்றாள்.

''ஆ... இந்த மல்லிகை எவ்வளவு நறுமணமானது. அழகானது. ஆனால், இது மலர்வதோ இரவில் அல்லவா? இது பகலில் மலர்ந்தால் இன்னும் எவ்வளவு அழகாக இருக்கும். ஏன் இந்த மல்லிகை இரவில் பூக்கின்றது....?''

மல்லிகை பற்றி கமலாவின் மனதில் இத்தகைய பல எண்ணங்கள் தோன்றின. கமலாவைப் போலவே உங்கள் மனதிலும் இரவுப் பூக்கள் பற்றி பல விடயங்களை அறிய ஆவல் ஏற்படலாம்.

## மலர்களின் செயற்பாடுகள்

எமக்குத் தெரிந்தவரையில் பெரும்பாலான மலர்கள் காலையில் சூரிய உதயத்துடனேயே மலர்கின்றன. சில மலர்கள் மாலையிலும் வேறு சில மலர்கள் இரவிலும் மலர்கின்றன. இவை இரவில் மலர்ந்தாலும் பொதுவாக ஏனைய மலர்கள் மூலம் நடைபெறும் சகல விடயங்களும் இம்மலர்களின் மூலமும் நடைபெறுகின்றன.

## மகரந்தச் சேர்க்கை

ஒரு மலரின் மூலம் செயல்படும் பிரதான செயல்பாடாக விளங்குவது (Pollination) மகரந்தச் சேர்க்கையாகும். ஒரு பூவின் கேசரங்களில் உள்ள மகரந்தம் குறி மீது படிதல் 'மகரந்தச் சேர்க்கை' எனப்படும். இது பல்வேறு வழிகளில் ஏற்படுகின்றது. பூச்சி, வண்டு உள்ளிட்ட பல்வேறு உயிரினங்கள் மூலமும் காற்று, நீர் என்பன மூலமும் ஏற்படுகின்றது. அதிகமாக இரவில் மலரும் பூக்களின் மகரந்தச் சேர்க்கையானது பூச்சி, வண்டு உள்ளிட்ட பல்வேறு உயிரினங்களின் மூலமே நடைபெறுகின்றது.



பூவின் விசித்திர இயல்புகள் காரணமாகப் பல்வேறு பூச்சி, வண்டு இனங்கள் கவரப்படுகின்றன. இப்பூக்களில் இருந்து வரும் நறுமணம் காரணமாகவும் அப்பூக்களை நாடி பூச்சிகள், வண்டுகள் வந்து அமர்கின்றன.

அங்கே பூவின் கேசரங்களில் உள்ள மகரந்தம் பூச்சியின் அல்லது வண்டின் உடலில் படிகின்றது. அப்பூச்சி அவ்வகையான வேறு ஒரு பூவில் அமரும்போது அப்பூவின் குறி மீது பூச்சியில் உள்ள மகரந்தம் படிந்து கொள்ளும். இவ்வாறு ஒரு பூவின் மகரந்தம் குறி மீது படிதலே 'மகரந்தச் சேர்க்கை' எனப்படும்.

## பல்வகைத் தோற்றம்

இரவில் பூக்கும் மலர்களானவை உயிரினங்களை வசீகரிக்க பல்வேறு வடிவங்களைக் கொண்டு விளங்குகின்றன. இரவில் நடமாடும் அதிகமான உயிரினங்களின் பார்வையில் நேரடியாகப் படுவதைவிட நறுமணத்தின் மூலம் வசீகரிப்பதே இவற்றின் சிறப்பம்சமாகும். அதனால், இரவில் மலரும் பூக்கள் அதிக நறுமணத்தைக் கொண்டு காணப்படுகின்றன. அத்தோடு, இரவில் மலரும் ஏறக்குறைய அனைத்துப் பூக்களும் வெள்ளை நிறம் கொண்டவை. அதிகமாக அப்பூக்களின் மகரந்தம், குறி, மகரந்தத்தூள் அனைத்துமே வெள்ளை அல்லது இள மஞ்சள் நிறமாகவே காணப்படும். இரவு நேரங்களில் வெள்ளை நிறம் நன்றாக தனித்துவமாகத் தெரிவதால் அப்பூக்கள் உயிரினங்களுக்கு நன்கு பிரகாசிக்கும்.

இரவில் நடமாடும் உயிரினங்கள் ஒரே இடத்தில் தங்கி இருப்பதற்கே பெரிதும் விரும்புகின்றன. அவ்வுயிரினங்கள் தங்குவதற்கு இலகுவான முறையில் இரவில் பூக்கும் மலர்களின் இதழ்கள் ஓரளவு தட்டையானதான இயல்பைக் கொண்டு காணப்படுகின்றன. இரவில் பூக்கும் மலர்களில் காணப்படும் மற்றொரு விசேட லட்சணம் மகரந்தத்தை தாங்கி இருக்கும் பூத்தண்டு சிறிதே உயர்ந்திருப்பதோடு பூங்கொத்தும் மேலே உயர்ந்து காணப்படும். அதன் மூலம் மலர்களை நாடி வரும் வண்டு, பூச்சிகளின் உடலில் மகரந்தம் நன்றாகப் படியும்படியான வடிவத்தில் அமைந்திருக்கும்.

## இதழ்கள் விரிதல்

இரவில் மலரும் பூக்களில் இதழ்கள் விரியும் நேரத்தைத் தீர்மானிப்பது சூழலின் தட்பவெப்பம், ஒளி, தென்றல் ஆகிய பல்வேறு வெளிக்காரணிகளும் தாவரங்களின் உட்புறத்தில் ஏற்படும் உயிரின மாற்றமுமே ஆகும் என விஞ்ஞானிகள் நம்புகின்றனர். இதேபோல் இரவுப் பூக்களில் அதிக வகையானவை சூழலின் தாக்கத்தால் அதிகம் தூண்டப்படுகின்றன. சில விசேடமான குறைந்த ஒளி நிலையிலேயே மலர்வதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.



## காடெனியா (Gardenia)

வெள்ளை நிறத்தைக் கொண்ட 'காடெனியா' மலரானது மிகவும் வாசனை கொண்டது. இப்பூவின் அடிப்பகுதி புனல் வடிவத்தைக் கொண்டது. ஒரு பூவில் 5 முதல் 13 வரையிலான இதழ்களைக் காணலாம். வாசனையும் அழகும் நிறைந்த மலராக இருப்பதால் பூங்காக்களில் இம் மலர்த் தாவரம் முக்கிய இடத்தை வகிக்கின்றது

-இரஞ்சித் ஜெயகர்

## குமுத மலர் (Nymphoicles indica)



குமுதமலர் இலங்கையின் சகல பிரதேசங்களிலும் வளரக்கூடிய ஒரு நீர்த்தாவரமாகும். வட்ட வடிவமான இலைகளைக் கொண்ட இத்தாவரம் கொத்துக் கொத்தாகப் பூக்கும். ஒரு கொத்தில் 20 மலர்கள் அளவில் இருக்கும். பூவின் உட்பகுதி குறிப்பாக நடுப்பகுதி மஞ்சள் நிறமாக காணப்படும். இப்பூவில் பஞ்சு போன்ற மென்மையான பகுதிகள் காணப்படுகின்றன. இரவில் நிலவொளியிலேயே குமுத மலர்கள் மலர்கின்றன.

## டிரகன் புரூட் (Hylocereus undatus)



டிராகன் புரூட் கொடியாகப் படரும் ஒரு வகை மலர்த்தாவரமாகும். மத்திய மற்றும் தென் அமெரிக்க பிரதேசங்களில் இருந்தே உலகின் ஏனைய நாடுகளுக்கும் இம்மலர்த் தாவரம் பரவியுள்ளது. 'டிரகன் புரூட்' இனிய பழங்களையும் கொண்டுள்ளது. இதன் பழங்களுக்கு உலகில் உயர்ந்த கேள்வி நிலவுவதால் இன்று உலகின் பல நாடுகளில் இதனைப் பயிர் செய்கின்றனர். அண்மையிலேயே இலங்கைக்கு இது அறிமுகப்படுத்தப் பட்டது. மலரானது வெண்ணிறமுடையது. பூவின் உட்பகுதி மஞ்சள் நிறமாகும். இரவில் பூக்கும் மிக அபூர்வமான மலர்களில் இதுவும் ஒன்று ஆகும்.

## சாமந்திப் பூ அல்லது இரவு மலர் (Nyctanthes arbor)




சாமந்திப் பூ சமஸ்கிருத மொழியில் அல்லது வடமொழியில் 'நிசி புஷ்பம்' (இரவில் மலரும் பூ ) என அழைக்கப்படுகின்றது. பெரிய புதர்களாக அல்லது 10 மீற்றர் உயரமான சிறிய மரமாகவும் வளரும்; மலர் வெள்ளை நிறமானது. அதில் சிறிய குழாய் போல் இருக்கும் காம்புப் பகுதி மிக அழுத்தமான கபில நிறத்தைக் கொண்டது. பூக்கள் கொத்துக் கொத்தாக மலரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரிய மண்டலத்தைக் கடந்து சென்ற முதல் விண்கலம்

'பயனியர்-10' (Pioneer-10) விண்கலம்தான் சூரிய மண்டலத்தைக் கடந்து சென்ற, மனிதனால் உருவாக்கப்பட்ட முதல் விண்கலமாகும். 1972 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2 ஆம் திகதி விண்ணில் செலுத்தப்பட்ட பயனியர்-10 என்ற விண்கலம், 1983 ஆம் ஆண்டு சூரிய மண்டலத்தைக் கடந்து சென்றது. 2000 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 19 ஆம் திகதி வரை இந்த விண்கலத்திலிருந்த 'ரேடியோ என்டனா' மூலம் சமிக்ஞைகள் வந்தன. அதன் பின்னர் எந்தவொரு சமிக்ஞையும் வரவில்லை. இந்த நிலையில் எட்டு மாதங்கள் கழித்து, 2001 ஏப்ரலில் மீண்டும் பயனியர்-10 விண்கலத்திலிருந்து ரேடியோ சமிக்ஞைகள் வருவதைக் கேட்டு நாஸா விஞ்ஞானிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

அத்துடன், செவ்வாய்க்கும் வியாழனுக்கும் இடையே உள்ள குறுங்கோள்கள் பாதை வழியே சென்ற முதல் விண்கலமும் வியாழனை அருகில் சென்று புகைப்படம் எடுத்து அனுப்பிய முதல் விண்கலமும் இதுதான் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## பூமியைத் தவிர வேறு கோள்களிலும் தண்ணீர் இருக்கிறது



பூமியைத் தவிர வேறு கோள்களிலும் தண்ணீர் இருக்குமா? என்ற சந்தேகம் காலங்காலமாக நிலவி வந்தது. ஆனால், 21 ஆம் நூற்றாண்டில் இந்த சந்தேகம் தீர்ந்து, வேறு சில கோள்களிலும் தண்ணீர் இருப்பது ஆதாரபூர்வமாக நிரூபிக்கப் பட்டுள்ளது.



குறிப்பாக செவ்வாய், வியாழன் ஆகிய கோள்களில் தண்ணீர் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்காவின் ரோட்ஸ் தீவில் உள்ள பிரௌன் பல்கலைக்கழக புவியியல் விஞ்ஞானிகள் 2001 ஆம் ஆண்டு, 'நாஸா'வின் 'ஓர்பிடர்' விண்கலம் எடுத்த செவ்வாய்க் கோளின் படங்களை ஆராய்ந்து இந்த உண்மைகளைக் கண்டுபிடித்தனர். செவ்வாயின் தரைப்பகுதியில் மிகக் குறைந்த ஆழத்தில் மிகப்பெரிய பனி நீர் ஏரி ஏற்பட்டு, செவ்வாயின் தரைக்குக் கீழே இறங்கியிருக்க வேண்டும்.


அதனால்தான் செவ்வாயின் மேற்பரப்பு புழுதி படிந்த தரையாக இருக்கின்றது. ஏறக்குறைய ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் செவ்வாய் கோள் குளிர்ந்து உறைந்த காலத்தில், இந்தப் பனி நீர் ஏரி உருவாகி தரைக்குக் கீழ் இறுகி இருக்க வேண்டும் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

அதனைத் தொடர்ந்து செவ்வாயின் மேற்பரப்பில் ஆய்வுகளை மேற்கொள்ள பல ஆய்வுக்கலங்கள் அனுப்பப்பட்டன. அதில் 'ஃபீனிக்ஸ்' ஆய்வுக்கலமும் ஒன்று. 'ஃபீனிக்ஸ்' அனுப்பிய புகைப்படங்களிலிருந்தும் செவ்வாயில் நீர் இருக்கின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறே, வியாழன் கோளை சுற்றிவரும் நான்கு பெரிய சந்திரன்களில் 'கெலிஸ்டோ' என்ற சந்திரனின் தரைக்குக் கீழே மிகப்பெரிய நீர்த்தேக்கம் இருப்பதாக 'மெட்ரிட் பல்கலைக்கழகம்'அறிவித்துள்ளது.வியாழனின் யுரோபா, கனிமீட் ஆகிய இரண்டு சந்திரன்களிலும் நிலத்தடி நீர்வளம் இருப்பதை ஏற்கனவே கண்டுபிடித்து விஞ்ஞானிகள் உறுதி செய்துவிட்டனர்.

## செவ்வாயின் வளிமண்டலம்


மனிதன் செவ்வாய்க்குச் சென்றால் அக்கிரகத்தில் மனிதன் சுவாசிப்பதற்கான ஒட்சிசன் போதிய ளவில் இல்லாதிருக்கும். அங்கு வளிமண்டலம்



இருந்தபோதும் அவ்வளிமண்டலத்தில் 95 சதவீதம் 'காபனீரொட்சைட்' வாயுவே இருக்கின்றது. இது மனிதன் சுவாசிப்பதற்கு ஏற்றதல்ல. எனினும், புவியின் வளிமண்டலத்தில் ஒட்சிசன் ஏறக்குறைய 21 சதவீதம் உள்ளது. எனவே, செவ்வாயில் மனிதன் வாழ வேண்டுமாயின் தொடர்ந்து அங்கு ஒட்சிசனை வழங்கிக் கொண்டிருக்க வேண்டும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

செவ்வாயின் வளிமண்டலத்திற்கு சூரியனிலிருந்தும் நட்சத்திரங்களில் இருந்தும் வருகின்ற ஆபத்தான கொஸ்மிக் கதிர்கள், புற ஊதாக்கதிர்களைத் தடுக்கும் சக்தி இல்லை. ஆனால், புவியில் உள்ள வளிமண்டலமும் 'ஓசோன்' படலமும் இக்கதிர்களில் இருந்து பூமியைப் பாதுகாக்கின்றன. அத்துடன், செவ்வாயின் வளிமண்டலத்தைபாதிக்கும் பெரும் பிரச்சினை புழுதிப் புயலாகும். செவ்வாய்க் கிரகத்தின் தரைப்பகுதியில் எங்கு பார்த்தாலும் சிவந்த நிறத்தில் தூசுப் படிந்திருக்கும்.காற்றடித்தால் தூசுகள் பறக்க ஆரம்பித்து விடும். சில சமயங்களில் செவ்வாயில் புழுதிப் புயல் அடிக்கும்போது எங்கும் புழுதி வாரிக் கொட்டும். அது புவியில் வீசும் புழுதிப்புயல் போல் ஒரு குறிப்பிட்ட இடத்துடன் வரையறுக்காது, செவ்வாய்க் கிரகம் முழுவதையும் சூழ்ந்தபடி பல நூறு கிலோமீற்றர் வேகத்தில் வீசும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

## இந்தியாவின் முதல் செயற்கைக்கோள்



இந்தியாவின் முதல் செயற்கைக்கோள் 'ஆர்யபட்டா'. இந்தியாவின் கணித மேதையும் வானவியல் ஆய்வாளராகவும் திகழ்ந்தவரான ஆர்யபட்டா என்பவரை கௌரவிக்கும் பொருட்டே இந்தியாவின் முதல் செயற்கைக்கோளுக்கு 'ஆர்யபட்டா' எனும் பெயர் சூட்டப்பட்டது.



60 DAY'S SPOKEN ENGLISH Course
இலவச தபால் மூல ஆங்கில பாடநெறி

இலகுவாக ஆங்கிலம் கற்றுக் கொள்ள விரும்பும் அனைவருக்கும் சிறந்த வழிகாட்டி
ENGLISH LANGUAGE யில் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.

BASIC/SPOKEN ENGLISH அடிப்படையில் இருந்தே தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது.

DIPLOMA IN ENGLISH தமிழில் ஓர் அளவு விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கும். ஆங்கிலம் தெரிந்த மாணவர்களுக்கு இது ஒரு சிறந்த பாடநெறியாகும்.

60 நாட்களுக்குள் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் வழங்கப்படும்



FREE FREE T.SHART
இலவசம் இலவசம் பாடநெறியில் இணையும் அனைவருக்கும் அழகிய T.SHART ஒன்று வழங்கப்படும்



இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்

பாடநெறியில் இணைய வயது கட்டுபாடோ, ஆங்கில முன் அறிவோ தேவையில்லை. பாடசாலை மாணவர்கள், தொழில் புரிவோர், தொழில் வாய்ப்பை எதிர்பார்த்திருப்போர், இல்லத்தரசிகள் என யாவருக்கும் இணைய முடியும்.

மேலதிக விபரங்களுக்கு 20/- பெறுமதியான 2 முத்திரைகள் அனுப்பி பெறலாம்

THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நஞ்சினாலும் உயிருக்குப் ப

**வாழ்வதற்கான சூழல் இல்லாவிடினும் இயற்கைச் சூழலுக்கு ஏற்ப தம்மை தகவமைத்துக் கொண்டு எதிரிகளிடமிருந்து தப்பி இரைகளைப் பிடித்து உட்கொள்ளும் விசேட ஆற்றலை ஏற்படுத்திக் கொள்ளும் இயல்புகளை உயிரினங்கள் இயற்கையாகவே பெற்றுக் கொண்டுள்ளன. நச்சு உமிழும் உயிரினமாகவும் மற்ற உயிரினங்களினால் இரையாக்கிக் கொள்ள முடியாத தன்மை கொண்ட இவை இயற்கையாகவே மிகவும் கவர்ச்சியானவையாகவும் மற்ற விலங்குகளை ஈர்க்கும் இயல்பு கொண்டனவாகவும் இருக்கும். இத்துடன், பளீர் மஞ்சள் மற்றும் சிவப்பு நிறத்தையும் கொண்டிருக்கும். வீதி சமிக்ஞை விளக்குகளில் மஞ்சள், சிவப்பு, பச்சை நிறங்கள் பயன்படுத்தப்பட்டிருப்பதும் இயற்கை நிறங்களைப் பின்பற்றியே என்று கூறலாம். சிவப்பு நிறம் அபாயத்தையும் மஞ்சள் நிறம் அபாய அறிவிப்பையும் ஆபத்தில்லை என்பதை பச்சை நிறமும் வெளிப்படுத்துகின்றன. அத்துடன் உயிரினங்கள் தம்மை தற்காத்துக் கொள்ள பலவிதமான உபாயங்களைக் கையாள்கின்றன. இதன் வெளிப்பாடாக சில உயிரினங்கள் நஞ்சை வெளிப்படுத்துகின்றன. மேலும் சில உயிரினங்கள் மின்சக்தியைப் பயன்படுத்துகின்றன.**

## நச்சு உயிரினங்கள்

நச்சு உயிரினங்கள் (Poisonous) மற்றும் நஞ்சை வெளிப்படுத்தும் உயிரினங்கள் இரு வகைப்படும். பாம்புகள், தேள்கள் என்பன தமது பாதுகாப்பு நடைமுறையாக நஞ்சைப் பயன்படுத்துகின்றன. இவை தீண்டுவதன் ஊடாகத் தமது உயிரைப் பாதுகாத்துக் கொள்கின்றன. நச்சுக் கொண்ட இந்த உயிரினங்கள் பிற உயிரினங்களிடமிருந்து தப்பித்துக் கொள்ள தம்மை மாற்றிக் கொள்ள வேண்டிய (Camouflage) அவசியம் ஏற்படுவதில்லை. பல விஷ உயிரினங்கள் இயற்கையின் அபாய அறிவிப்பு நிறங்களான சிவப்பு, மஞ்சள் மற்றும் கறுப்பு நிறத்திலானவை என்பதனால் அவற்றைக் கண்டவுடன் ஒதுங்கிக் கொள்ளவும், கண்டும் காணாதது போன்று சென்று விடவும் ஏனைய உயிரினங்கள் பழகிக் கொண்டுள்ளன. இவற்றிலிருந்து வெளிப்படும் நஞ்சு ஏனைய உயிரினங்கள் மீது பாய்ச்சப்படும் பொழுது எரிச்சல் வலி போன்ற உணர்வுகள் ஏற்படுகின்றன. இதனால், அச்சமுறும் உயிரினங்கள் அவற்றை இரையாக்கிக் கொள்வதை விடுத்து ஓடிவிடுகின்றன. அதன்பின் அந்த உயிரினங்கள் நச்சுக் கொண்ட உயிரினங்களை உட்கொள்ள ஒரு போதும் முன்வருவதில்லை. இவ்வாறு நஞ்சினை வெளிப்படுத்தும் உயிரினங்கள் தமது உடல் பாகத்திலிருந்து அல்லது சுரப்பியிலிருந்தே நஞ்சை வெளிப்படுத்துகின்றன. ஐரோப்பிய தவளை இனங்கள் ஏனைய விலங்குகளிடமிருந்து தப்பிக்கொள்ள காதுகளுக்கு அருகில் இருக்கும் நச்சு சுரப்பியினூடாக நஞ்சைப் பீய்ச்சுகின்றன.



## மின்சக்தியை பாய்ச்சுபவை

பாதுகாப்புக்காக மீனினங்கள் மின்சக்தியைப் பாய்ச்சுவதை மனிதன் மின்சக்தியை அறிவதற்கு முன்னரே வழக்கமாகக் கொண்டிருந்தன. தென் அமெரிக்காவைச் சேர்ந்த மீனினம் அதில் பிரபல்யம் பெற்றதாகும். 2.7 மீற்றர் நீளம் கொண்ட இந்த மீனைத் தொட்டால் மின் கம்பியைத் தொட்டது போன்ற அதிர்ச்சி நிலை ஏற்படும். நீர் நிலைகளைக் கடக்கும் குதிரை மற்றும் இவ்வாறான ஏனைய விலங்குகளில் இந்த மீனினம் தொடுகையுற்றால் அவற்றின் கால்கள் பலவீனமடைந்து நீரில் விழுந்து விடும்.

## நஞ்சை வெளிப்படுத்தும் உயிரினங்கள்

நஞ்சை வெளிப்படுத்தும் உயிரினங்கள் (Venomous) பலவாறு நஞ்சினை வெளிப்படுத்துகின்றன. நச்சுக்கொம்புகளைக் கொண்ட சில உயிரினங்கள் மற்றும் பாம்பு வகைகள் தீண்டுவதன் ஊடாக நஞ்சைப் பாய்ச்சுகின்றன.

தென்னாபிரிக்க 'அமேசன்' வனாந்தரத்தில் உள்ள 'அமேசோனியா' (Amazonian caterpillar) முதலை வகையின் உடலில் நச்சு உரோமங்கள் உள்ளன. இங்கு நச்சு தேனீக்கள் மற்றும் குழவிகள் போன்ற உயிரினங்களும் உள்ளன. எனினும், நச்சு உயிரினங்கள் பெரும்பாலும் சமுத்திரங்களிலேயே வசிக்கின்றன.



## நச்சுத் தன்மையைப் போக்கும் நஞ்சு



நச்சு உயிரினங்களிடம் இருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள நாம் நஞ்சினால் உருவாக்கப்பட்ட மருந்துகளையே உட்கொள்ள நேரிடுகின்றது. பாம்பின் விஷத்தை குதிரைகளில் செலுத்திப் பெறப்படும் எதிர்ப்புச் சக்தியைக் கொண்டே பாம்பு விஷத்திற்கான மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. குதிரைகளின் உடலில் பாம்பின் விஷம் செலுத்தப்பட்ட பின்னர் அவற்றின் உடலில் அந்த விஷத்தினை தாங்கும் எதிர்ப்பு ரசாயனங்கள் சுரக்கின்றன. அதன்பின் அந்தக் குதிரைகளின் குருதி மாதிரிகளைபெற்று விஷ எதிர்ப்பு மருந்து பெறப்படுகின்றது. குதிரைகளின் குருதி மாதிரிகள் சில மனிதர்களிடையே ஒவ்வாமையை ஏற்படுத்துவதனால் ஆடுகளிடமிருந்து இந்த மாதிரிகள் பெறப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் அதிர்ச்சியாலும்
# ாதுகாப்பு



### உடலுக்குள் நஞ்சு பரவுவது இப்படித்தான்

விலங்குகளின் விஷத்தினைக் கொண்டு மருந்துகளைத் தயாரிக்கும்போது கருத்தில் கொள்ளப்படும் விடயங்கள் இரண்டு உள்ளன. குறித்த விலங்குகள் விஷத்தினைப் பயன்படுத்தும் முறை மற்றும் அந்த விஷம் உடலுக்குள் சென்றவுடன் செயற்படும் விதம் ஆகிய இரண்டு விடயங்கள் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன. சில உயிரினங்கள் தமது இரையைக் கொல்லவும் அவற்றை செயலிழக்கச் செய்யவும் விஷத்தினைப் பிரயோகிக்கின்றன. அதேபோன்று, சில விலங்கினங்களின் கொடிய விஷம் மிகத்துரிதமாக சரியான இலக்கினை அடைந்து சுவாசத்தொகுதிக்குள் பிரவேசித்து தீய விளைவை ஏற்படுத்துகின்றது. மூளைக்கு குருதியை எடுத்துச் செல்லும் சிறிய நரம்புகளுக்குள்ளும் இவ்விஷம் பரவும் தன்மை கொண்டதாகும்.

### நஞ்சு, மின் அதிர்ச்சியை வெளிப்படுத்தும் மீன்கள்

கடலில் 50 இற்கும் அதிகமான இவ்வாறான தன்மை கொண்ட மீன் இனங்கள் உள்ளன.முழு உடலிலும் நச்சுத் தன்மை கொண்ட மீன்களும் உள்ளன. சில வகை மீன்களிடம் நச்சுத்தன்மை கொண்ட முட்களும் உள்ளன. அவை எதிரிகளிடமிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கும் பிடிக்கும் இரையை செயல் இழக்கச் செய்யவும் இதன் நச்சுத் தன்மை பயன்படுகின்றது. 'விவர்' எனப்படும் மீனினம் அவ்வாறே கொடிய நச்சுத்தன்மையை முட்களில் கொண்டுள்ளது. அவுஸ்திரேலிய 'கல் மீன்கள்' எனப்படும் ஒரு வகை மீனினமும் அவ்வகையானதே. இவற்றைக் கருத்திற்கொள்ளாது கடலில் நீச்சலடிக்கச் செல்வது ஆபத்தானது. இவ்வாறான மீன் வகைகளை உட்கொள்வதும் அபாயம் மிக்கதாகும். இந்த மீன்களை இரையாக்கிக் கொள்ளும் உயிரினத்திற்கு மரணம் நிச்சயமாகும். இவ்வாறான நச்சு மீன்களின் உடலில் உள்ள நச்சு சுரப்பி கொண்ட முட்களில் மட்டுமே நச்சுத்தன்மை காணப்படும். இரையைப் பிடிக்க, எதிரியை விரட்டியடிக்க, மின் சக்தியைப் பயன்படுத்தும் திறன் சில மீன்களுக்கு உண்டு. புராதன கிரேக்க இனத்தவர்கள் 'ட்ரொபிடோ' என்ற மீனினத்தைப் பயன்படுத்தி மூட்டு வீக்கத்திற்கு சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளனர். அபாயம் ஏற்படும்போது தாக்கும் மீன்களும் உண்டு இவற்றில் 'ஸ்ட்டிங்ரே' என்னும் மீன்கள் பிரசித்தி பெற்றவையாகும். இவற்றின் முதுகெலும்பு கூர்மையான தன்மை வாய்ந்தது. இதன் வால் பகுதியில் சிறிய பற்களும் உள்ளன. இதனைப் பயன்படுத்தி தாக்குதல் தொடுக்கும் திறன் கொண்டது. 'வரல்' மீன்களின் முதுகெலும்பில் நஞ்சு உள்ளது. நச்சு சுரப்பிகளினால் அவற்றுக்கு நச்சுத்தன்மை கிடைக்கின்றது. இந்தப் பகுதியைத் தொட்டவுடன் தோற் பகுதி வெடித்து நச்சு வெளிப்படும்.



### நஞ்சினால் நஞ்சை சுகப்படுத்தும் மருந்துகள்

இயற்கையில் இருந்து புதிய மருந்துகளைக் கண்டுபிடிக்க நஞ்சு கொண்ட உயிரினங்களும் தாவரங்களுமே பொருத்தமாக அமையும் எனக் கருதப்படுகின்றது. தற்காலத்தில் பல மருந்துகள் தயாரிப்பதற்கு இந்த முறையே கைக்கொள்ளப்படுகின்றது. தென் அமெரிக்க பழங்குடியினர் தமது அம்புகளின் முனைகளில் தாவரம் ஒன்றிலிருந்து பெறப்படும் நஞ்சைத் தடவிக் கொள்வர். அந்த நஞ்சைக் கொண்டு தசைகளை, நார்களை நெகிழ்வுபடுத்தும் மருந்து ஒன்று தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறே Saw Scaled Viper எனும் பாம்பின் நஞ்சிலிருந்து இரத்தம் கட்டிபடுதலைத் தடுக்கும் மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

### பென்டஸ்மஸ் நஞ்சு கொண்ட தவளை



**ஈக்குவடோரில் வசிக்கும் பென்ட்ஸ்மஸ் என்னும் தவளைகளின் சருமத்திலிருந்து பெறப்படும் நஞ்சு ரசாயனத்தைக் கொண்டு சிறந்த வலி நிவாரணி தயாரிக்கப்படுகின்றது.**

### பைலோபெட்டிஸ் டெரிவிலிஸ் தவளை

**மத்திய அமெரிக்கப் பழங்குடியினர் இந்தத் தவளைகளிடமிருந்து பெறப்படும் நஞ்சினைக் கொண்டு வேட்டையாடுகின்றனர். இதன் மூலம் நோய் எதிர்ப்பு சக்தி மருந்துகளும் தயாரிக்கப்படுகின்றன.**





### கொம்பு நத்தை

**வறண்ட பகுதி நீரோடைகளில் வசிக்கும் இந்த நத்தையிடம் நஞ்சுக் கொம்புகள் உள்ளன. இந்த நஞ்சினை கொண்டு தயாரிக்கப்படும் மருந்து 'எல்ஷைமர்' மற்றும் சிந்தனைப் பிளவு, மன நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுத்தப்படுகின்றது.**



### டர்சியோபெலோ புடையன்

**மத்திய அமெரிக்க பாம்பு இனமான இதன் நஞ்சிலிருந்து பெறப்படும் ரசாயனத்தினால் பக்ற்றீரியா தொற்றுக்களைக் கட்டுப்படுத்தக்கூடிய மருந்து தயாரிக்கப்படுகின்றது.**

### தாய்லாந்து பாம்பு

**இந்தப் பாம்பின் நஞ்சினால் 'இம்யுனோக்கைன்' எனும் மருந்து தயாரிக்கப்பட்டுள்ளது. இது நரம்புத் தொகுதியில் ஏற்படும் நோய்களுக்கு தீர்வாகப் பயன்படுத்தப்படுகின்றது.**





### இஸ்ரேலிய ராட்சத தேள்

**5 அங்குலம் கொண்ட இந்த தேளின்-வால் பகுதியில் இருக்கும் விஷம் கொடியதாகும். எனினும், அதிலிருந்து பெறப்படும் 'க்ளோரோடொக்சின்' எனும் ரசாயனத்தினால் மூளைப்புற்று நோய்க்கு நிவாரணம் கிடைக்கின்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷ்... உங்களுக்கு மட்டும்!



## நெப்போலியன், முசோலினி, ஹிட்லர் போன்றோருக்கு வழிகாட்டிய நூல்




நிக்கொலோ மாக்கியவெல்லி என்பவர் 1513 ஆம் ஆண்டு 'இளவரசன்' (The prince) என்ற நூலை எழுதினார். அது ஓர் அரசியல் நூலாகும். இவர் இறந்து ஐந்தாண்டுகளுக்குப் பிறகே அதாவது 1532 இலேயே அந்த நூல் வெளிவந்தது.

இந்நூலைப் படித்து,இதில் கூறப் பட்டுள்ள அரசியல் கருத்துக்களை அநேகமாகப் பின்பற்றியவர்கள் யார் தெரியுமா? நெப்போலியன், முசோலினி, ஹிட்லர் போன் றோர்கள்தான்! இவர்கள் மூவரும் இந்த நூலைப் படித்ததோடு, தங்க ளுக்கு வழிகாட்டும் ஒரு நூலாக தங்களோடு வைத்துக் கொண்டி ருந்தனராம். ஆக, இந்த நூலுக்கு எவ்வளவு பெருமை பாருங்கள்!

## முப்பது ஆண்டுகள் நடைபெற்ற நாடகம்

நம் நாட்டில் ஒரு நாடகம் ஒரே இடத்தில் மூன்று தடவைகளுக்கு மேல் மேடையேற்றப்படுவதே பெரிய விஷயம். அதுவும் ஊர் ஊராகச் சென்று மேடையேற்றி னால்தான் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் அதன் புகழ் பேசப்படும்.

ஆனால், இங்கிலாந்தில் ஒரு நாடகம் ஒரே ஊரில்-ஒரே அரங்கில் முப்பது வருடங்களாக தொடர்ந்து நடைபெற்றுள்ளது. இடையிடையே நடிகர்கள்தான் மாறியிருக்கிறார்கள். ஆனால், நாடகம் மட்டும் நிறுத்தப் படவே இல்லை.

அந்த நாடகத்தின் பெயர் 'மவுஸ்ட்ரப்' (Mousetrap). அதன் ஆசிரியர் அகதா கிறிஸ்டி (Agatha Chistie). இது 1952 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நடைபெற்றுள்ளது. இந்நாட



கத்தை ஏறத்தாழப் பத்து லட்சம் பேருக்கும் அதிகமானோர் பார்த்தி ருக்கிறார்கள். 1955 ஆம் ஆண்டு இதில் நடித்துக் கொண்டிருந்த ரிச்சர்ட் ஒட்டன் பரோ என்பவர் இடைவிலக நேரிட்டதால், இந்த நாடகம் நின்று போகும் சூழ்நிலை ஏற்பட்டது. ஆனாலும் நாடகம் நிறுத்தப்படவில்லை.

# 'விஜய்' அறிவுசார் போட்டி; வெற்றியீட்டியோர் விபரம்

## கீடெக்குகள் வெற்றியீட்டியோர் (கடந்த இதழ் தொடர்ச்சி)

சலீம் எம்.ரியாழ்,
108, அஷ்ரஃப் வீதி,
ஏறாவூர்-02.

ஏ.ஷிமால் அஹமட்,
4/A, 'தாருல் ஷிமால்',
1 ஆவது குறுக்கு வீதி,
திக்வல்லை.

எஃப்.ஷானாஸ்,
90/26, ஆஸ்பத்திரி வீதி,
கண்டி.

ஆர்.சாரங்கன்,
28-2/2, மாதங்கஹவத்தை,
வெள்ளவத்தை,
கொழும்பு-06.

எம்.ஃபாத்திமா சிஹாரா,
98, அலுத்கம,
மனன்வத்தை, மாத்தளை.

எம்.என்.நப்லா,
B.6 பள்ளி வீதி,
ஹபுகஸ்தலாவ.

ஜே.அப்துல் பஸீத்,
477/1, தக்கியா வீதி,
தலுவகொட்டுவ,
கொச்சிக்கடை.

ஏ.எம்.ஃபாய்ஸ்,
5/7, தொரகமுவ வீதி,
உடதலவின்ன.

மா.வருணபாலன்,
மே/பா வி.கணேஸ்வரன்,
44, தாமரை வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

செ.மாதூரன்,
41/1, பிரம்படி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

எம்.எஸ்.எஃப்.முபஷ்ஷிரா,
52/5, வயத்தாவை வீதி,
மடிகே,
கலகேதர.

ஏ.கபீர்த்தன்,
620, நாவலர் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

எம்.ஆர்.எஃப்.ரவ்லத்,
40, 5 ஆம் குறுக்கு வீதி,
புத்தளம்.



பி.லெமுவல்,
மே/பா
டி.பத்மபுவனேந்திரன்,
3 ஆம் ஒழுங்கை,
யார்ட் வீதி,
கல்முனை-01.

பி.ஃபாத்திமா ரைஸா,
42, நாவுள்ள,
தெமோதரை,
பதுளை.

## பேனா வெற்றியீட்டியோர்

எம்.எஃப்.ரிஃப்கா,
40, 3 ஆவது ஒழுங்கை,
காலி.

த.திவாகரன்,
காளி கோவிலடி,
கோப்பாய் வீதி,கோப்பாய்.

ஆர்.எம்.ரிஸ்லி,
148 B, நாகவில்லு,
பாலாவி.

எம்.மஹிலன்,
ஐயனார் கோவிலடி,
மல்லாகம்.

எஸ்.அஸ்மியா,
22, உல்பொத,
கனேவெல்பொல,கெகிராவ.

ஜ.மு.ஸவாஹிர்,
142, மத்திய வீதி,
பொத்துவில்-07.

எம்.என்.எஃப்.ஷிஃப்கா,
35/A, ராஸிக் வீதி,
தொட்டவத்த,
பாணந்துறை.

ய.சயந்தன்,
கடுக்காமுனை,
கொக்கட்டிச்சோலை,
மட்டக்களப்பு.

எம்.கே.எம்.ராஸி,
கபுவத்த, தெனிபிடிய,
வெலிகம.

எஃப்.ஸஹ்ரா ஏ.லத்தீஃப்,
284, தெஹிகஹகொட்டுவ,
மடவள பஸார்.



எம்.எஸ்.எம்.
இனாமுல்லாஹ்,
கண்டி லுக்மானியா ம.வித்.,
பங்கொல்லமட,
ரதுகொஹா, திகல.

என்.எஃப்.வஜீஹா,
350, கொடுகே
மாவத்தை,
அநுராதபுரம்.

எஸ்.சபேசன்,
1 ஆம் குறுக்கு,
14/8, திருச்செந்தூர்,
கல்லடி.
மட்டக்களப்பு.

எம்.எம்.முஹம்மட்
அஷ்பாக்,
14, தாறுல்ஹுஸ்னா,
அஷ்-ஷஹீட்
A.L.H வீதி,
காத்தான்குடி.

ஷஹாமா சக்காப்,
45/3,
சென்.அந்தனிஸ் லேன்,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கண்டி பொல்கொல்லவில் ஊடக பயிற்சிப்பட்டறை






'பிளேன்' ஸ்ரீலங்கா நிறுவனத்தின் ஏற்பாட்டில் 'விஜய்' - தேசிய கல்வி நிறுவகத்தின் பங்களிப்பில் கண்டி மாவட்டத்தின் பன்வில பிரிவிற்குட்பட்ட தமிழ்மொழி பாடசாலைகளுக்கென நடத்தப்பட்ட ஊடகத்துறை தொடர்பான மூன்று நாள் விதிவிட பயிற்சிப்பட்டறை கண்டி பொல்கொல்லவில் அண்மையில் நடைபெற்றது.

தேசிய கல்வி நிறுவகத்தின் ஊடகத்துறைப் பணிப்பாளர் பந்துல பீ.தயாரத்ன, 'விஜய்' ஆசிரியர் வி.ரெட்லி ஹெரிசன் மற்றும் 'விஜய' பத்திரிகையின் உதவி ஆசிரியர் இந்திக செனவிரத்ன ஆகியோர் விரிவுரைகளை நடத்தினர்.

கண்டி மாவட்டத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பாலகிருஷ்ணன் அவர்களும் மொழிபெயர்ப்புப் பணியை மேற்கொண்டார். 'பிளேன் ஸ்ரீலங்கா' நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளர் ஷானிக்கா மலல்கொட மற்றும் பாடசாலைகளுக்கான தொடர்பாளர்களான இனோக்கா, ரமேஷ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மேற்படி, பயிற்சிப்பட்டறையில் அலகொல்ல த.ம.வித்., கந்தகட்டிய த.ம.வித்., நாவலர் த.வித்., நக்கள்ஸ் த.வித்., அபிராமி த.வித்., விபுலானந்தர் த.வித்., குறிஞ்சி த.வித்., விக்னேஸ்வரா த.வித்., ஹாத்தளை த.வித்., மாவுஸ்ஸா த.வித். ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும் அதிபர்கள் மற்றும் ஆசிரியர், ஆசிரியைகளும் கலந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியா

**கண்டங்கள் எனும் பதத்தை ஆங்கிலத்தில் Continents என அழைக்கின்றனர். Continents என்பது ஒரு கிரேக்கச் சொல்லாகும். இது பெரும் நிலப்பகுதி (Main land) என்பதையே குறிக்கின்றது. உலகில் மொத்தக் கண்டங்கள் பரப்பளவின் அடிப்படையில் ஆசியா, ஆபிரிக்கா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, அண்டார்டிக்கா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா என்று வரிசைப்படுத்தப்படுகின்றன. அந்தவகையில், உலகின் 7 கண்டங்கள் பற்றி சுருக்கமாக தொடரும் இதழ்களில் நோக்குவோம். அதனை அடுத்து கண்டங்களின் அடிப்படையில் நாடுகள் பற்றிய விசேட குறிப்புக்களையும் ஆராய்வோம்.**

பரப்பளவிலும் மக்கள் தொகையிலும் உலகின் மிகப் பெரிய கண்டமாக விளங்குவது ஆசியாதான். உலக மக்கள் தொகையில் ஏறக்குறைய 60% மானோர் ஆசியாவிலேயே உள்ளனர். புவியியல் அமைப்பிலும் நிலவும் காலநிலைகளிலும் மிகுந்த வேறுபாடு கொண்டதும் பல்வேறு காலநிலை மாற்றங்கள் நிலவும் நாடுகளையும் ஆசியாக் கண்டத்தில் காணலாம்.

## ஆசியாவின் எல்லைகள்

புவியியல் ரீதியில் ஆசியாவும் ஐரோப்பாவும் இணைந்து காணப்படும் கண்டங்களாகும். எனவே, ஆசியாவின் எல்லையை மிகத் துல்லியமாக வரையறை செய்வது கடினமாகும். வடக்கே ஆர்க்டிக் சமுத்திரமும் மேற்கில் செங்கடலும் மத்தியதரைக்கடலும் தெற்கில் இந்து சமுத்திரமும் கிழக்கே பசுபிக் சமுத்திரத்தின் ஒரு பகுதியான பெரிங் தொடுகடல், ஒக்கொட்ஸ் கடல், ஜப்பான் கடல், வடசீனக்கடல், தென்சீனக்கடல் என்பனவும் எல்லைகளாக அமைந்துள்ளன.

மொத்த நிலப்பரப்பு - சுமார் 4,40,62,000 ச.கி.மீற்றர்.

கிழக்கு-மேற்கு தூரம் - சுமார் 9700 கி.மீற்றர்.

வடக்கு-தெற்கு தூரம் : சுமார் 8690 கி.மீற்றர்.

கடற்கரை : 129,000 கி.மீற்றர்.




## ஆசியாவின் பெருமை

ஆசியாவில் சுமார் 6000 இற்கும் மேற்பட்ட மொழிகள் இருப்பதாக ஒரு கணிப்பீடு தெரிவிக்கின்றது. கோடிக்கணக்கானோர் பேசும் மொழி சீனாவின் 'மெண்டரின்' மொழி என்பது குறிப்பிடத்தக்கது. இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம், சீக்கியம், சைனம், தாவோ, சொராஷ்ட்ரியன் போன்ற மகத்தான மதங்கள் அனைத்தும் ஆசியாவிலேயே பிறவியெடுத்தன. மொசப்பத்தேமியா நாகரிகம், சீன நாகரிகம், இந்து நாகரிகம் போன்றவற்றின் ஆரம்பமும் இங்குதான் நிலவியது. மிகப்பெரிய கலாசாரங்களின் உறைவிடமும் ஆசியாவே. மிகப்பெரும் சாம்ராஜ்ஜியங்கள் பிறந்ததும் இங்குதான்.

பிற்காலத்தில் மிக நீண்டகாலமாக ஐரோப்பிய சாம்ராஜ்ஜியங்களின் ஆதிக்கத்திற்கு ஆசிய நாடுகள் உட்பட்டு, அடிமைப்பட்டுக் கிடந்தன. பின்னர் 20 ஆம் நூற்றாண்டின் வெவ்வேறு காலகட்டத்தில் அவை சுதந்திர நாடுகளாகப் பரிணமித்தன. ஆயுர்வேதம் முதல் அக்குபஞ்சர் வரை பல்வேறு சிகிச்சை முறைகளை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர்கள் ஆசியரே. புராதன வேதங்களும் இதிகாசங்களும் தோன்றியதும் பலவித ஆரம்பக் கண்டுபிடிப்புகளின் உறைவிடமும் ஆசிய நாடுகள்தான்.

தேயிலை, சீனி, றப்பர், பருத்தி, சமையல் எண்ணெய், நிலக்கடலை என பல்வகைப் பொருட்களின் உற்பத்தியில் முன்னணி உற்பத்தியாளர்களும் ஆசிய நாட்டவர்கள்தான்.


கனிய வளத்தைப் பொறுத்தவரையில் தகர உற்பத்தி, இரும்புருக்கு உற்பத்தி, நிலக்கரி உற்பத்தியில் ஆசியாவின் பங்களிப்பு அளப்பரியது. பெற்றோலிய வளத்தின் இருப்பும் ஆசியாவில் கணிசமாகவுள்ளது. 1970 ஆம் ஆண்டளவில் ஆசிய நாடுகள் அணுசக்தித் திறன் பெற்றன. முதன்முதலில் சீனாவும் தொடர்ந்து 1974 இல் இந்தியாவும் அணுகுண்டுப் பரிசோதனைகளை நடத்தின. இன்று இஸ்ரேல், பாகிஸ்தான், தென்கொரியா ஆகிய நாடுகள் அணு ஆயுத நாடுகளாக காணப்படுகின்றன.

## ஆசிய நாடுகள்

| | | | |
|---|---|---|---|
| * அசெர்பெய்ஜான் | * ஆர்மேனியா | * ஆப்கானிஸ்தான் | * இந்தியா |
| * இந்தோனேஷியா | * இஸ்ரேல் | * இலங்கை | * ஈராக் |
| * ஈரான் | * உஸ்பெகிஸ்தான் | * கசகஸ்தான் | * ஓமான் |
| * கிழக்குத் தீமோர் | * கிர்கிஸ்தான் | * கம்போடியா | * குவைட் |
| * தென்கொரியா | * வடகொரியா | * கட்டார் | * சீனா |
| * ஜப்பான் | * ஜோர்தான் | * துர்க்மினிஸ்தான் | * துருக்கி |
| * தாய்லாந்து | * தாய்வான் | * நேபாளம் | * பலஸ்தீன் |
| * புருனே | * பாகிஸ்தான் | * பிலிப்பைன்ஸ் | * பஹ்ரைன் |
| * மியன்மார் (பர்மா) | * பங்களாதேஷ் | * பூட்டான் | * மலேசியா |
| * மொங்கோலியா | * மாலைதீவுகள் | * ஐக்கிய அரபுக் குடியரசுகள் | |
| * யெமன் குடியரசு | * லெபனான் | * லாவோஸ் | * வியட்னாம் |
| * சிரியா | * சிங்கப்பூர் | * சவுதி அரேபியா | * ஜோர்ஜியா |
| * தஜிகிஸ்தான் | * ஹொங்கொங் | | |

## ஆசியாவின் சிறப்புத் துளிகள்

| | |
|---|---|
| * உலகிலேயே மிகப்பெரிய கண்டம் | - ஆசியா |
| * மக்கள் தொகை அதிகமான நாடு | - சீனா |
| * மிக உயரமான சிகரம் | - எவரெஸ்ட் |
| * கடல் மட்டத்தில் இருந்து மிகத் தாழ்ந்த பகுதி | - சாக்கடல் |
| * உலகில் விவசாயம் ஆரம்பித்தது | - மேற்காசியா |
| * எழுத்துருவாக்கம் | - சுமேரியா (ஈராக்) |
| * வெடிமருந்து கண்டுபிடிப்பு | - சீனா |
| * அச்சுக்கலை அறிமுகம் | - சீனா |
| * பூச்சியம் அறிமுகம் | - இந்தியா |
| * குதிரைகளை வளர்க்கத் தொடங்கியது | - மத்திய ஆசியா |
| * உலகின் மிகப்பெரிய எண்ணெய் உற்பத்தி நாடு | - சவுதி அரேபியா |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முச்சக்கர 'எப்டெரா'






**என்ன இது? பார்த்த மாத்திரத்தில் ஒரு விண்வெளி ஓடம் போல் காட்சியளிக் கின்றது. இது நாஸாவின் புதிய விண்வெளி ஓடமா? அல்லது ஆய்வுக் கலமா? என்று உங்களுக்கு யோசிக்கத் தோன்றும். ஆனால், அதுதான் இல்லை. இது மோட்டார் வாகனத் தொழில்நுட் பத்தின் எதிர்கால உற்பத்தியொன்று. இந்த முச்சக்கர மோட்டார் வாகனத்திற்கு 'எப்டெரா 2h' (Aptera 2h) என பெய ரிட்டுள்ளனர். ஐக்கிய அமெரிக்காவின் கெலிஃபோர்னியாவில் 'எப்டெரா' மோட்டார் வாகன உற்பத்தியாளர்கள் பெருமையுடன் வழங்கும் ஒரு புதிய தொழில்நுட்ப முயற்சி!**

உலகின் மோட்டார் வாகன உற்பத்தி வரலாற்றில் இதுவரை உற்பத்தி செய் யப்பட்ட வாகனங்களில் எரிபொருள் சிக்கனமான வாகனம் இதுதான் என 'எப்டெரா' மோட்டார் வாகன உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். சாதாரண மோட்டார் வாகனத்தில் மணிக்கு 97 கிலோமீற்றர் வரை ஓடும் வேகத்தை இந்த வாகனத்தில் 10 நிமிடங்களில் சென்றடையலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எப்டெரா வகையைச் சேர்ந்த 2h மாதிரி மோட்டார் வாகனத்தில் 5 கலன் கொள்ளளவைக் கொண்ட தாங்கியிலுள்ள எரிபொருளை பயன்படுத்தி, 970 கிலோ மீற்றர் முதல் 1130 கிலோமீற்றர் தூரம் வரை பயணிக்க முடியும். இது ஏற்கனவே தயாரிக்கப்பட்ட எப்டெரா வாகன மாதிரியை விட மும்மடங்கு அதிகமாகும். இதில் 'கெசோலின்' இயந்திரத்தின் துணையுடன் பயணிக் கும்வேளை தவிர்ந்த ஏனைய நேரங் களில் மின்சக்தியின் உதவியுடன் பயணிப்பதற்கான விசேட மோட்டார் ஒன்றும் பொருத்தப்பட்டுள்ளது. அதில் உள்ள மின்கலத்தில் ஒருமுறை மின்னேற்றிய பின் 130 கிலோமீற்றர் தூரம் பயணிக்க முடியும். தவிர, முழுமையாக மின்சக்தியால் பயணிக்கக்கூடிய விதத்திலும் உற்பத்தியாக்கப்பட் டுள்ள இவ்வாகனம், மின்சக்தி இல்லாத வேளை களில் கெசோலின் இயந்திரத்தால் சக்தியைப் பிறப்பாக்கி, ஓடக்கூடிய வகையில் தயாரிக்கப் பட்டுள்ளது.

நாளொன்றிற்கு 120 கிலோமீற்றரிலும் குறைந்த தூரம் பயணிக்க வேண்டுமாயின் கொசோலின் இயந்திரத்தைப் பாவிக்க வேண்டிய அவசியம் ஏற்படாது. அதனால், எரிபொருளுக்கான செலவும் ஏற்படாது. 20,000-40,000 அமெரிக்க டொலர் அல்லது இலங்கை நாணயப்படி 20 லட்சம்-40 லட்சம் ரூபாவுக்கு இடைப் பட்ட தொகையில் எப்டெரா 2h மோட்டார் வாகனத்தின் விலை நிர்ணயிக்கப்பட் டுள்ளது.



மோட்டார் வாகனத்தின் உட்புறம்

எப்டெரா 2h மோட்டார் வாக னத்திற்கு மூன்று சக்கரங்கள் மாத்திரமே உள்ளன. முன்பக்கம் இரண்டும் பின்புறம் ஒன்றுமாக அதன் சக்கரங்கள் பொருத் தப்பட்டுள்ளன. இம்மோட்டார் வாக னத்தின் இயக்கமும் கட்டுப் பாடும் முன்புற இரு சக்கரங் களிலேயே தங்கி யுள்ளன. பின்புறச் சக்கரம் ஒரு நாடாவின் மூலமே சுழல்கின்றது.



மோட்டார் வாகனத்தின் பின்புறத் தோற்றம்



எப்டெரா 2h ஆனது முச்சக்கர வாகனமாக இருப் பதால், இதனை மோட்டார் வாகனமாக இல்லாமல், மோட்டார் சைக்கிளாக வகைப்படுத்த ஐக்கிய அமெரிக்காவின் அநேகமான மாநிலங்கள் தீர்மானித்துள்ளன.

பெரும்பாலானோர் இந்த அற்புத வாகனத்தை பாதுகாப்புக் குறைந்த ஒரு வாகனமாகவே கருது கின்றனர். ஆனால் எப்டெரா மோட்டார் வாகன உற்பத்தி நிறுவனத்தின் முக்கிய நோக்கம், வாகனத்தைப் பாதுகாப்பதல்ல; வாகனத்தில் பயணிக்கும் சாரதி மற்றும் பயணிகளின் உயிரைப் பாதுகாப்பதே என அந்நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர். அதனால், எப்டெரா வாகனம் சகல பாதுகாப்பு பரிசோத னைகளுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளது. அது மாத் திரமல்லாமல் ஃபோர்மியூலா-1 மோட்டார் வாகனத்திலுள்ள பாதுகாப்பு கட்ட மைப்புகள் இந்த வாகனத்திலும் சேர்க்கப்பட் டுள்ளதாக நிறுவனத்தினர் கூறுகின்றனர்.

**-இரஞ்சித் ஜெயகர்**

**'எப்டெரா மோட்டார் வாகன உற்பத்தி நிறுவனத்தின் முக்கிய நோக்கம், வாகனத்தைப் பாதுகாப்பதல்ல; வாகனத்தில் பயணிக்கும் சாரதி மற்றும் பயணிகளின் உயிரைப் பாதுகாப்பதே'**

கண்டி **The English Language Institute** இன் வெளியீடான

**30 DAY'S EASY WAY ENGLISH BOOK**

தமிழ் விளக்கத்துடன் கூடிய ஆங்கில பேச்சுப் பயிற்சி புத்தகம்

இப்புத்தகமானது 160 பக்கங்களையும் 3000 சொற்களுக்கு மேல் உள்ளடக்கப்பட்டது இது பொது அறிவுடன் கூடியதாகவும் அடிப்படை ஆங்கில சொற்கள் உற்பட அணைத்து சொற்களுக்கும் தமிழ் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கும்.

*வெளி நாடுகளில் தொழில் வாய்ப்புக்கு செல்ல உள்ளவர்கள்
*தொழில் வாய்ப்பை எதிர்பார்த்திருப்பவர்கள் * பாடசாலை மாணவர்கள் இல்லத்தரசிகள் என யாவருக்கும் உகந்தது.

இப்புத்தகத்தின் விலை 450/= ரூபா மாத்திரமே. பெற விரும்பினால்.பெயர் முகவரியுடன் 450/= ரூபாவுக்கான காசுக்கட்டளை. (MONEY ORDER) அல்லது ஏதாவது ஒரு COMMERCIAL BANK கிளையில் A/C No.1040026412 THE ENGLISH LANGUAGE ISTITUTE எனும் பெயருக்கு வைப்பு செய்து பற்றுச்சீட்டையும் இணைத்து அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

**THE ENGLISH LANGUAGE INSTITUTE**
NO.17 1ST FLOOR PERADENIA ROAD KANDY.
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாவரும் அறிந்திருக்

**நாம் அன்றாட வாழ்வில் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றோம். இந்நடவடிக்கைகளில் ஈடுபடும்போது பல்வேறு விதமான சட்டங்களையும் ஒழுங்கு விதிகளையும் நாம் பின்பற்றுகின்றோம். இவ்வாறான சட்டங்களும் ஏனைய ஒழுங்கு விதிகளும் எமது பாதுகாப்புக்காகவும் நலனுக்காகவுமே அமைந்துள்ளன.**

## சட்டம் என்பது...

எந்தவொரு நாட்டிலும் 'சட்டத்தின் முன் அனைவரும் சமம்' என்ற தத்துவம் பின்பற்றப்படுகின்றது. ஆட்சியாளர்கள், குடிமக்கள் அனைவருக்கும் சட்டம் பொதுவானதாகும். சட்டத்தின் மூலமே மக்களின் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்படுகின்றன. சமூகத்தை முறையாக வழிநடத்தவும் வரையறைக்குள் வைத்திருக்கவும் சட்டங்கள் அவசியமாகின்றன.

அதேபோன்று ஒழுங்கு விதிகளும் நடைமுறையில் உள்ளன. இவ் ஒழுங்கு விதிகளை சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் மாற்றிக் கொள்ள முடியும். ஆனால், சட்டங்களை அவ்வாறு இலகுவாக மாற்றியமைக்க முடியாது.



## சட்டத்தின் அவசியம்

சட்டம் எப்போதும் எமது பாதுகாப்பைக் கருதி உருவாக்கப்பட்டதாகும். உதாரணமாக, போக்குவரத்துச் சட்டங்களைப் பின்பற்றி நாம் வாகனத்தை செலுத்தத் தவறின், அதனால் ஏற்படும் விபத்துக்களைத் தவிர்க்க முடியாததாகிவிடும். போக்குவரத்து ஒழுங்கு விதிகளை மீறும்போது வாகன நெரிசலும் ஏற்படுகின்றது.

அவ்வாறுதான் மாணவர்களாகிய உங்களுக்கு நன்மை பயக்கும் வகையில் கல்வி தொடர்பான சட்டங்கள் பல உள்ளன. இலவசக் கல்வி பெறுவதற்கு உங்களில் ஒவ்வொருவருக்கும் உரிமை இருக்கின்றது. சகல பாடசாலை மாணவர்களுக்கும் இலவசப் பாடநூல், சீருடை என்பனவும் இந்த சட்டத்தின் அடிப்படையில் உரிமையாக வழங்கப்பட வேண்டும்.

நாம் எத்தகைய செயலைச் செய்ய முற்படும் போதும் அதுபற்றியும் அதன் சாதக-பாதகங்கள் பற்றியும் சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது. அதற்காகவே சட்டங்கள் உள்ளன. ஆனால், சிலர் சட்டம் பற்றிய போதிய அறிவு, தெளிவு இன்மையால் சட்டம் எம்மைதண்டிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமே உள்ளது என்று தவறான அபிப்பிராயம் கொண்டுள்ளனர். ஆனால், இது தவறான கருத்தாகும்.



## சட்டக் கல்வி

சட்டம் பற்றிய அறிவு பெறும் போது எமது உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள் பற்றிய அறிவும் தெளிவும் ஏற்படுகின்றது. இந்த அறிவைப் புகட்டக்கூடிய இடங்களாக வீடுகள், பாடசாலைகள், மத வழிபாட்டுத்தலங்கள் இருப்பதோடு, வழிகாட்டிகளாக பெரியோர்களும் உள்ளனர்.



## சிறுவர்களும் சட்டமும்

சட்டத்தின் முன்னிலையில் சிறுவர்களுக்கென்று விசேட வரப்பிரசாதங்கள் உள்ளன. அது பற்றிய அறிவு அவர்களுக்கு இருக்கவேண்டும். இன்றேல், அவர்களைப் பிறர் ஏமாற்றி விடலாம். சிறுவர்கள் உடல், உள ரீதியாக மென்மையானவர்கள்; பலவீனமானவர்கள். ஆகவே அவர்கள் அவதானமாக இருக்க சட்டம் கைகொடுக்கின்றது.

## சொத்துடமைச் சட்டம்

பெற்றோர் தமது பிள்ளைகளுக்குரிய சொத்துக்களை அவர்கள் பெயரில் எழுதி வைத்தாலும் பருவ வயதை அடையும் வரை பிள்ளைகள் அந்த உடன்படிக்கைகளுக்கு உட்பட முடியாத நி
வருகின்றது. அதன் உரிமை பிள்ளைக்கு வ
நிறைவடைய வேண்டியிருக்கின்றது. இவ்
ஏதுவாய்க் கொண்டு அவர்களின் பெயரில்
எவரும் இலகுவாக சூறையாடிவிட முடிய

## தண்டனை வி

18 வயதுக்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகளுக்
சட்டத்தில் இடமில்லை. அதேபோன் 8 வ
கீழ்ப்பட்டவர்களை குற்றச்செயல்களின் அ
குற்றவாளியாகக் கருதவும் முடியாது.

## சட்டத்தை மீறுதல்

இன்று நடைமுறையில் உள்ள சட்டங்கள்
களால் மீறப்படுகின்றன. ஒருவருக்கு அநீ
இழைத்தல், துன்புறுத்தல், தீங்கிழைத்தல்
பல்வேறு வழிகளால் சட்ட ஒழுங்குகள் மீறப்படுகின்றன.

உதாரணமாக, அடையாள அட்டை இன்றி நடமாடுவதும் இன்று தண்டனைக்குரிய குற்றமாகவே கருதப்படுகின்றது.

சட்டத்தை மீறும்போது பல்வேறு விதமான தண்டனைகள் விதிக்கப்படுகின்றன. சொத்துக்களை அரச உடைமைய
சிறைத்தண்டனை, அபராதம் விதித்தல், பி
விடுதலை செய்தல், எச்சரித்தல் என்பன அ
அடங்கும்.

## சிறுவர் குற்றம் செ

சிறுவர் ஒருவர் ஏதாவதொரு குற்றச் செ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ருக்க வேண்டிய சட்டங்கள்




_ முடியாத நிலை இருந்து
ிள்ளைக்கு வந்தடைய 18 வருடங்கள்
ின்றது. இவ்வாறான நிலைமைகளை
ரின் பெயரில் இருக்கின்ற சொத்துக்களை
டிவிட முடியாது.

## னை விதித்தல்

ிள்ளைகளுக்கு மரண தண்டனை விதிக்க .
போன்ற 8 வயதுக்குக்
யல்களின் அடிப்படையில்
டியாது.

## மீறுதல்

ள சட்டங்கள் மனிதர்
வருக்கு அநீதி
கிழைத்தல் போன்ற
ழுங்குகள்




ம

து.
வேறு
க்கப்படு
உடைமையாக்குதல்,
விதித்தல், பிணையில்
ல் என்பன அவற்றில்

## ற்றம் செய்யின்...

ரு குற்றச் செயலில் குற்றவாளியாக இனம்

காணப்பட்டால், அவர் தொடர்பாக தீர்ப்பளிப்பதற்கு விசேட சட்டங்கள் உள்ளன. 1939 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க குழந்தைகள் மற்றும் இளையோர் சட்டம் அதற்கு இடமளிக்கின்றது. இச்சட்டத்தின் கீழ் சிறுவர்கள் தொடர்பான வழக்குகள் சிறுவர்கள் தொடர்பான சிறப்பு நீதிமன்றம் ஒன்றிலேயே விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். எல்லா மஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்களும் சிறுவர் மஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் ஆகவும் செயற்படுகின்றது. இலங்கையில் பம்பலப்பிட்டியில் சிறுவர் மஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சிறுவர் குற்றவாளியாக இனங்காணப்படுமிடத்து தண்டனைக்காக சிறைச்சாலைக்கு அனுப்பப்படாமல் சிறுவர் பராமரிப்பு நன்னடத்தை

**எந்தவொரு நாட்டிலும் 'சட்டத்தின் முன் அனைவரும் சமம்' என்ற தத்துவம் பின்பற்றப்படுகின்றது. ஆட்சியாளர்கள், குடிமக்கள் அனைவருக்கும் சட்டம் பொதுவானதாகும்'**

நிலையங்களுக்கே அனுப்பப்படுகின்றனர். அங்கு அவர்கள் சீர்திருத்தப் படுகின்றனர். விவசாயம், மேசன், தச்சு வேலை போன்ற தொழில் பயிற்சிகளும் இங்கு வழங்கப்படுகின்றன.

## எதிர்கால சந்ததியினர்

இந்நாட்டின் எதிர்கால தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ள இருப்பது இன்றைய சிறுவர்களே.அதனால், சிறுவர்களை வேலைக்கமர்த்தல், சித்திரவதை செய்தல், துன்பங்களுக்கு உள்ளாக்குவது போன்ற செயல்கள் சட்டத்தின் மூலம் தடை செய்யப்பட்டிருக்கின்றது.

இன்று இலங்கையிலும் சிறுவர் துஷ்பிரயோகம்,சிறுவர்களை தொழில்களில் ஈடுபடுத்துதல், வீட்டு வேலைக்கமர்த்துவது, சித்திரவதை செய்வது போன்ற செயல்களில் இருந்து சிறுவர்களைப் பாதுகாப்ப தற்கும் சட்டங்கள் உள்ளன. இந்நாட்டின் அரசியல் யாப்பின் 12 ஆவது பிரிவு மூலமும் இந்தப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுகின்றது. 1991 ஆம் ஆண்டில் அரசாங்கம் சர்வதேச சிறுவர் பாதுகாப்புப் பிரகடனத்தில் கையொப்பம் இட்டதன் மூலம் இச்சட்டத்திற்குள் மேலும் புதிய விடயங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

## சிறுவர் பாதுகாப்பு சட்ட வரலாறு

சிறுவர் பாதுகாப்பு தொடர்பான முதலாவது சட்டம் 1928 ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது. அதனை அடுத்து, சிறுவர் பாதுகாப்புக்கான சங்கம் உருவாக்கப்பட்டது. ஆசியாவில் ஏற்படுத்தப்பட்ட முதல் சிறுவர் பாதுகாப்பு அமைப்பாக இது கருதப்படு கின்றது. அதனைத் தொடர்ந்து சிறுவர் பாதுகாப்பு என்ற விடயம் பரவலாகப் பேசப்பட்டதால் புதிய சட்டங்களும் உருவாக்கப்பட்டன.

சிறுவர் பராமரிப்புச் சட்டம், பெற்றோரை இழந்த சிறுவர்களைப் பாதுகாக்கும் சட்டம், குற்றவியல் தண்டனைச் சட்டக் கோவையில் சிறுவர் தொடர்பான சட்டங்கள், குடும்ப வன்முறைச்சட்டம், சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுக்கும் சட்டம் என்பன இவ்வகைச் சட்டங்களாகும்.


சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, சிறுவர் மற்றும் குழந்தைகள் அபிவி ருத்தி அமைச்சு (Child Health Line) போன்றன சிறுவர்களுக்கான ஏனைய அமைப்புக்களாகும்.

## சட்டம் பற்றி அறியாமை

நாம் எமது உரிமைகள் தொடர்பாக அறிந்திருக்கவேண்டும். எமது உரிமைகளைப் பாதுகாத்து அதற்கு உத்தரவாதமளிப்பது சட்டங் களாகும். அதனால், சட்டங்கள், ஒழுங்குவிதிகள் தொடர்பாக இயன் றளவு அறிவினைப் பெறுவது காலத்தின் தேவையாகும்.

சட்டத்தை மீறும்போது தண்டனைக்கு ஆளாக நேரிடுகின்றது. சட்டம் பற்றிய அறிவு எமக்கு இருந்தால் எமது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள முடிவதோடு,மற்றவர்களின் உரிமைகளுக்கும் மதிப்பளிக்க முடிகின்றது.

**அமீர் ஹுசைன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்புக் கோழிக்குஞ்சு

ஒரு கோழி, விவசாயப் பண்ணையில் இருந்த வைக்கோற் குவியலில் முட்டையிட்டு அடைகாத்துக் குஞ்சுகள் பொரித்தது. புதிதாகப் பிறந்த குஞ்சுகளை அந்த அம்மாக் கோழி ஆசையோடு அணைத்துக் கொண்டது. எல்லா மாகப் பதினொரு குஞ்சுகள். அவற்றில் பத்துக் குஞ்சுகள் வெள்ளை நிறம். ஒன்று மாத்திரம் கறுப்பு.

அந்தக் கறுப்புக் குஞ்சு கண்ணுக்கு அச்சொட் டாகத் தெரிந்தது. அம்மாக் கோழி அந்தக் குஞ்சைத் தனது சிறகினால் அணைத்து அதன் உச்சியில் முத்தம் கொடுத்தது. பின்பு மற்றைய குஞ்சுகளையும் அணைத்து முட்டமிட்டது.

குஞ்சுகள் பொரித்திருக்கும் சந்தோஷச் செய் தியை அந்த அம்மாக் கோழி தனது தோழிக் கோழிகளுக்குச் சொன்னது. அந்தக் கோழிகள் வந்து குஞ்சுகளைப் பார்த்து வாழ்த்தி மகிழ்ந்தன. குஞ்சுகள் பொரித்திருக்கும் செய்தியை அந்தப் பண்ணையில் உள்ள பூனை கேள்விப்பட்டது. அவற்றைப் பார்ப்பதற்காக வந்தது. "கோழி அக்கா, உன் பத்துக் குஞ்சுகளும் வெள்ளையாக அழகாக இருக்கின்றன.

அதென்ன! ஒரு குஞ்சு மட்டும் கறுப் பாக இருக்கின்றது. அது அழகாக இல்லை! அதைப் பார்க்கையில் எனக்கு வெறுப்பாக இருக்கிறது" என்று கூறிவிட்டுப் போனது.

பூனை, சொன்னதை அந்தக் குஞ்சுகள் ஆச்சரியமாகக் கவனித்தன. கறுப்புக் குஞ்சு தனது நிறத்தை மாறி மாறிப் பார்த்தது. "எனது நிறம் கறுப்பா? நான் அழகாக இல்லையா?" என்று நினைத்துக் கவலைப் பட்டது.





ஒருநாள் கோழியம்மா குஞ்சுகளைக் கூட்டிக் கொண்டு புல் நிலத்தில் உலாவப் போனது. அந்தப் பண்ணையில் வளர்க்கப்படும் ஆடு அப்போது தன் குட்டிகளுடன் அங்கே புல் மேய்ந்து கொண்டிருந்தது. அது வெள்ளை நிறம். அதன் குட்டி களும் வெள்ளை. அந்த ஆடு கோழியையும் குஞ்சுகளையும் பார்த்து விட்டு "கோழித் தங்கச்சி, இதெல்லாம் உன் குஞ்சுகளா? வெள்ளைக் குஞ்சுகள் பஞ்சு உருண்டை போல அழகாக இருக் கின்றன. ஆனால், அந்த ஒரு குஞ்சு மாத்திரம் காகம் போலக் கறுப்பாக இருக்கிறதே. அது அழகாக இல்லை" என்று சொன்னது.

இதைக் கேட்டதும் கறுப்புக் குஞ்சு கண் கலங் கியது. இன்னொரு நாள் கோழி அம்மா தன் குஞ்சுகளைக் கூட்டிக் கொண்டு குளக்கரைக்குப் போனது. அங்கே வாத்து அம்மா தன் குஞ்சுகளுக்கு உணவு தேடிக் கொடுத்துக்கொண் டிருந்தது. வாத்துக் குஞ்சு களைக் கண்டதும் கோழிக் குஞ்சுகள் விளையாடு வதற்காக அவற்றின் அருகே சென்றன. அப்போது அந்த வாத்துக் குஞ்சுகள் அந்தக் கறுப்புக் குஞ்சை ஆச்சரிய மாகப் பார்த்தன. "நாங்கள் எல்லாம் வெள்ளை நிறம். நீ ஏன் கறுப்பாக இருக்கிறாய்?" என்று ஒரு குஞ்சு கேட்டது. இன்னொரு குஞ்சு, "நீ கரிச்சட்டி போல இருக் கிறாய். உன்னைத் தொட்டால் நாங்களும் கறுப் பாகி விடுவோம். நீ கிட்ட வராதே" என்றது. அதைக் கேட்டு கறுப்புக் குஞ்சு விம்மி விம்மி அழத் தொடங்கி விட்டது.

உடனே குஞ்சுகளை எல்லாம் அம்மாக் கோழி கூட்டிக் கொண்டு போய்விட்டது.

அந்தப் பண்ணையில் ஒரு காவல் நாய் இருந்தது. அது கறுப்பு நிறம். அது ஒருநாள் கோழி தன் குஞ்சுகளுடன் இரை தேடிக் கொண்டி ருப்பதைக் கண்டு அதனிடம் வந்தது "கோழியம்மா, இதெல்லாம் உன் குஞ்சுகளா? நல்லாயிருக்கே! வெள்ளைக் குஞ்சு களுக்கு இடையே ஒரு கறுப்புக் குஞ்சும் இருக்கிறது. கறுப்பு என்றால் எனக்கு மிகவும் விருப்பம்" என்று கூறி, அந்தக் கறுப்புக் குஞ்சை மெல்லத் தடவிட்டது.

இதைக் கேட்டதும் அந்தக் கறுப்புக் குஞ்சுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

***(மிகுதி அடுத்த இதழில்...)***

**எம்.என்.எஃப்.நிஸானா நஸீர்,**
**கம்பளை.**



## அதிக காலம் வாழும் உயிரினம் ஆமை

உலகில் வாழும் உயிரினங்களில் நீண்ட காலம் வாழக் கூடியது ஊர்வன வகுப்பைச் சேர்ந்த ஆமைகள்தான். பெரும்பாலான ஆமைகள் சராசரி 100 ஆண்டுகள் வரை வாழ்கின்றன. சில ஆமைகள் 150 ஆண்டுகளுக்கும்



மேலாக வாழ்கின்றன. பசுபிக் பெருங்கடலிலுள்ள 'கலபாகொஸ்' (Galapagos) என்னும் தீவுகளுக்கு 'ஆமைத்தீவு' என்றே பெயர். அங்குள்ள சில ஆமைகள் மிகப் பெரியவை. ஒவ்வொன்றும் 5-6 அடி நீளமும் 150-160 கிலோ எடையும் கொண்டவை. இவ்வகை ராட்சத ஆமைகள் 140 ஆண்டுகளுக்கு மேல் உயிர் வாழ்கின்றன. இத்தகவல்களை முன்பு சார்லஸ் டார்வின் எனும் உயிரியல் விஞ்ஞானி தம் உலகக் கடல் ஆய்வுப் பயணத்தின்போது குறிப்பிட்டுள்ளார்.

## முயலின் காது பெரிதாக இருப்பது ஏன்?

முயல்களின் அளவில் உள்ள பிற பாலூட்டிகளில் காண்பதை விட முயலின் காதுகள் மிகப் பெரியவையாக இருக்கின்றன. உண்மையில் முயலுக்குக் காது பெரிதாக இல்லாமலிருந்தால் அதனால் உயிர் வாழமுடியாது. தனக்கு ஆபத்து ஏற்பட இருக்கின்றதென முயலுக்குத் தென்பட்டால் அது உடனே புதருக்குள் ஓடிப் பதுங்கி விடும். அப்போது, அதன் நீண்ட காதுகள் சுற்றுப் புறச்



சூழ்நிலையை மிகத் துல்லியமாக ஒலியைக் கொண்டு அறிந்து கொள்கின்றன. அத்தோடு, சுற்றுப் புறத்தில் வெப்பம் அதிகமாகும்போது முயலின் உடலுக்குத் தேவையான அளவு வெப்பத்தைச் சீராக வைத்துக் கொள் ளவும் அதன் காதுகள் பயன்படுகின்றன.

**எம்.எஸ்.எம்.வாஸிம்,**
**அக்-அஸ்.ஸிராஜ் ம.வித்.,அக்கரைப்பற்று.**

## உலகின் முக்கியமான எரிமலைகள்

| எரிமலையின் பெயர் | நிலையம் | உயரம் (மீற்றர்) |
|---|---|---|
| கொட்டோ பக்சி | ஈக்வடோர் | 5897 |
| மவுன்ற்வறங்கல | அலாஸ்கா | 4267 |
| மவுனாலோவா | ஹவாய் | 4170 |
| எறிபஸ் | அந்தாட்டிக்கா | 3718 |
| எட்னா | சிசிலி | 3340 |
| சில்லன் | சிலி | 2842 |
| வில்லாறிக்கா | சிலி | 2842 |
| நுவாபெரு | நியூஸிலாந்து | 2796 |
| அசாமா | ஜப்பான் | 2542 |
| ஹெக்லா | ஐஸ்லாந்து | 1491 |
| விசுவியஸ் | இத்தாலி | 1277 |
| கிலாயிவா | ஹவாய் | 1247 |
| ஸ்ரொட்போலி | இத்தாலி | 925 |

**எஸ்.ராணி சந்திக்கா, நோர்வூட் த.ம.வித்.,**

## விடுகதைகள்

1. வீட்டுக்கு வந்த விருந்தாளி வாசலில் நிற்கின்றான். அவன் யார்?
2. ஈக்கு ஈக்கு நெடும் ஈக்கு. அது என்ன?
3. ஊறு ஊறு தேங்காய்ப் பூ உறியிலே வைத்தாலும் நாறாது. அது என்ன?

### விடைகள்

1. செருப்பு
2. மழை 3. உப்பு

தொகுப்பு: சு.ரதீபா, யா/இந்து மகளிர் கல்.,




கண்ணுக்குள் கண்மணியாய்
காதுக்குள் கவிதையாய்
என் நெஞ்சுக்குள் இனிமையாய்
என்னுள் பூத்துக் குலுங்குவது கல்வி!

கல்வி எனும் பெரும் பேற்றை
கற்றிட வேண்டும் ஆர்வமுடன்
கல்வியை நன்கே கற்றிட்டால்
வளமும் நலமும் பெற்றிடலாம்.

**ஜி.ஜெயலலிதா, நு/மூன்பிளேன் த.வித்.,**

## ஒலிம்பிக் விளையாட்டுக்கள் இடம்பெற்ற நாடுகள்


| ஆண்டு | இடம் | நாடு |
|---|---|---|
| 1932 | லொஸ் ஏஞ்சல்ஸ் | அமெரிக்கா |
| 1936 | பெர்லின் | ஜேர்மனி |
| 1948 | லண்டன் | இங்கிலாந்து |
| 1952 | ஹெல்சிங்கி | பின்லாந்து |
| 1956 | மெல்பேர்ன் | அவுஸ்திரேலியா |
| 1960 | உரோம் | இத்தாலி |
| 1964 | டோக்கியோ | ஜப்பான் |
| 1968 | மெக்ஸிக்கோ | மெக்ஸிக்கோ |
| 1972 | முனிச் | மேற்கு ஜேர்மனி |
| 1976 | மொன்ட்ரியல் | அமெரிக்கா |
| 1980 | மொஸ்கோ | ரஷ்யா |
| 1984 | லொஸ் ஏஞ்சல்ஸ் | அமெரிக்கா |
| 1988 | சியோல் | தென் கொரியா |
| 1992 | பார்சிலோனா | ஸ்பெய்ன் |
| 1996 | அட்லாண்டா | அமெரிக்கா |
| 2000 | சிட்னி | அவுஸ்திரேலியா |
| 2004 | எதென்ஸ் | கிரேக்கம் |
| 2008 | பீஜிங் | சீனா |

தொகுப்பு: ஏ.டபிள்யூ.மொஹமட் பஸீல், பு/எருக்கலம்பிட்டி மு.ம.வித்., பாலாவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எஸ்.கீர்த்திகா, தரம் - 2,
இராமநாதன் இந்து ம.கல்.,
கொழும்பு-04.



சி.எம்.மில்ஹான்,
தரம் - 11B,
அல்-பஹ்ரியா ம.கல்.,
பாணந்துறை.



சு.கமலேந்திரபிரதீபன்,
தரம் - 8C,
ஊவா விஞ்ஞானக் கல்.,
ஹாலி-எல.



எம்.ஆர்.எம்.மஸூத்,
தரம் - 8,
அல்-இர்ஸாத் ம.வித்.,
ஹாலி-எல.



எஸ்.தனுஷிகா, தரம் - 2,
சைவ மங்கையர் வித்.,
வெள்ளவத்தை.

# விஜய் மாணவர் கழகம்




அங்.இல : 2539
எஃப்.சப்னா,
தரம் - 11,
ஸாஹிரா தே.பாட.,
மாவனல்லை.



அங்.இல : 2540
சி.டிலேந்திரன்,
தரம் - 9,
வடிவாம்பிகா த.ம.வித்.,
சிலாபம்.



அங்.இல : 2541
ஆ.விஜேந்திரன்,
தரம் - 10,
அக்கராயன் ம.வித்.,
அக்கராயன்.



அங்.இல : 2542
எம்.முபாரிஸ்,
தரம் - 11,
மு.ம.வித்.,
குருக்குத்தலை.



அங்.இல : 2543
ந.கஜேந்தினி,
தரம் - 9,
மகாஜனக் கல்.,
மட்டக்களப்பு.



அங்.இல : 2544
இஸ்ஸத் நிஸா,
தரம் - 11,
அம்பலந்துவை மு.வித்.,
பாணந்துறை.



அங்.இல : 2545
எம்.ஸஃப்னா,
தரம் - 7,
அல்-அமீன் ம.வித்.,
பொலன்னறுவை.



அங்.இல : 2546
வி.அனுஷன்,
தரம் - 7,
அ.த.க.பா.,
பாலமோட்டை.



அங்.இல : 2547
எம்.உமைர்,
தரம் - 8,
அஸ்ஹர் கல்.,
அக்குரனை.



அங்.இல : 2548
ஆர்.ஆனந்தகுமார்,
உயர்தரம்,
புனித மரியாள் ம.வித்.,
மதுகம.



அங்.இல : 2549
எஸ்.நிஷங்கன்,
தரம் - 9,
இந்துக் கல்.,
மட்டக்களப்பு.



அங்.இல : 2550
எஃப்.நஸ்ரா,
உயர்தரம்,
அலிகார் மு.வித்.,
கல்-எளிய.



அங்.இல : 2551
இ.மயூரன்,
தரம் - 10,
இந்து ம.வித்.,
பரந்தன்.



அங்.இல : 2552
எம்.யாஸிர்,
தரம் - 11,
முஸ்லிம் வித்.,
குளியாப்பிட்டிய.



அங்.இல : 2553
செ.பிரகதீஸ்வரன்,
தரம் - 7,
ஹைலெவல் ச.பாட.,
ஹட்டன்.



அங்.இல : 2554
எம்.ஹஸ்மத்,
தரம் - 11,
வெஸ்லி கல்.,
கொழும்பு.



அங்.இல : 2555
எம்.சனோஜன்,
தரம் - 8,
இந்து ம.கல்.,
புத்தளம்.



அங்.இல : 2556
பாரிஸ் முஹம்மட்,
தரம் - 11,
முஸ்லிம் ம.ம.வித்.,
சம்மாந்துறை.



அங்.இல : 2557
எம்.ரஸீன்,
தரம் - 9,
மு.ம.வித்.,
அபுக்காகம.



அங்.இல : 2558
ஆர்.சந்திரகலா,
உயர்தரம்(கலை),
கந்தகட்டிய த.ம.வித்.,
தவலதன்ன.


## இனி, நீங்கள் செய்ய வேண்டியது...

விரைவில் கைவண்ணங்கள் பகுதியில் புதியதொரு மாற்றத்தை ஏற்படுத்தப் போகின்றோம். அதன்படி, **கீழ் கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளில் மாத்திரம் உங்கள் கைவண்ணங்கள் வரையப்படல் வேண்டும்.**

### தலைப்பு

- ★ தரம் 1-5 - எனது பூந்தோட்டம் அல்லது எனது செல்லப்பிராணி
- ★ தரம் 6-8 - துணி அலங்காரம் அல்லது புதிய பழரசம் ஒன்றுக்கான விளம்பரம்
- ★ தரம் 9-11 - மீன்பிடிப்போர் அல்லது வயலில் வேலை செய்வோர்

கைவண்ணங்களின் பின்பக்கத்தில் **உங்கள் பெயர், தரம், பாடசாலையின் பெயர், பாடசாலை அமைந்துள்ள இடம், கைவண்ணத்தின் தலைப்பு** என்பனவற்றை எழுதி **27.03.2009 இற்கு முன்னர்** எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வையுங்கள். நேர்த்தியான, அழகான கைவண்ணங்களைப் பிரசுரித்து, உங்களை மகிழ்ச்சிப்படுத்த 'விஜய்' காத்திருக்கின்றது.



திருகோணமலை,உவர்மலை 'சகாய இல்லத்தை'ச் சேர்ந்த தேவராஜ்-சகாயமேரி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வன் அபிஷேம், தனது ஒன்பதாவது பிறந்தநாளை 17.03.2009 அன்று தனது இல்லத்தில் கொண்டாடினார். இவரை குடும்பத்தினர் உட்பட உறவினர், நண்பர்கள் அனைவரும் இறை இயேசுவின் அருளால் பல்கலையும் கற்று சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.

## 2008 தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



கம்பஹா, அல்-அஷ்ஹர் மத்திய கல்லூரியில் கல்வி பயிலும் எம்.கே.எஃப். அம்னா, 136 புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்துள்ளதோடு, பாடசாலை மட்டத்தில் 6 ஆவது இடத்தையும் கம்பஹா மாவட்டத்தில் 21ஆவது இடத்தையும் பெற்றுள்ளார். இவர் எம்.எச்.எம்.கியாஸ், எம்.எஃப். அஜ்வா (ஆசிரியை) தம்பதியரின் புதல்வியாவார்.



கட்டுகஸ்தோட்டை, புனித அந்தோனி மகளிர் கல்லூரியில் கல்வி கற்கும் எஃப்.சப்ரினா ஃபர்சான், 125 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்தில் ஆனந்தவுக்கும் சுசிலாவுக்கும் இடையில் நடைபெறும் ஒரு சிறிய உரையாடலைப் பார்ப்போம்

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்

ආනන්ද: ඔයා මොන පංතියටද යන්නේ සුසිලා?
ஒயா மொன பந்தியடத யன்னே சுசிலா?
ஆனந்த: நீங்கள் எந்த வகுப்புக்குப் போகின்றீர்கள் சுசிலா?

සුසිලා: මම ගණිතය පංතියට යනවා.
மம கணிதய பந்தியட யனவா.
சுசிலா: நான் கணித வகுப்புக்குப் போகின்றேன்.

ආනන්ද: ගණිතය පංතිය කොහෙද තියෙන්නේ?
கணிதய பந்திய கொஹெத தியென்னே?
ஆனந்த: கணித வகுப்பு எங்கே இருக்கின்றது?

සුසිලා: ගණිතය පංතිය මීගමුවේ තියෙන්නේ.
கணிதய பந்திய மீகமுவே தியென்னே.
சுசிலா: கணித வகுப்பு நீர்கொழும்பில் இருக்கின்றது.

ආනන්ද: කවද කවදාද ගණිතය පංතිය තියෙන්නේ?
கவத கவதாத கணிதய பந்திய தியென்னே?
ஆனந்த: எவ்வெப்போது கணித வகுப்பு உள்ளது?

සුසිලා: සඳුදායි,බදාදයි තියෙන්නේ.
சந்துதய், பதாதய் தியென்னே.
சுசிலா: திங்கட்கிழமையும் புதன்கிழமையும் இருக்கின்றது.

ලබන මාසයේ ගණිතය සම්මන්ත්‍රණයක් තියෙනවා.
ඔයත් එන්න.
லபன மாசயே கணிதய சம்மன்திரணயக்
தியெனவா. ஒயத் என்ன.
வருகிற மாதம் ஒரு கணிதக் கருத்தரங்கு இருக்கிறது.
நீங்களும் வாருங்கள்.

ආනන්ද: ඒක කොහෙද පැවැත්වෙන්නේ?
ஏக கொஹெத பெவெத்வென்னே?

ஆனந்த: அது எங்கே நடைபெறுகின்றது?

සුසිලා: මීගමුව නගර ශාලාවේ. උදේ අටට පටන් ගන්නවා.
மீகமுவ நகர ஷாலாவே. உதே அடட படன்
கன்னவா.

சுசிலா: நீர்கொழும்பு நகர சபையில். காலை எட்டு
மணிக்குத் தொடங்கும்.

ආනන්ද: හොඳයි, මම එන්නම් සුසිලා.
ஹொந்தய், மம என்னம் சுசிலா.
ஆனந்த: நல்லது, நான் வருகிறேன் சுசிலா.

## பயிற்சி

பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழி பெயர்க்க.

உதா: நான் கணித வகுப்புக்குப் போகின்றேன்.
මම ගණිතය පංතියට යනවා.

i. அது எங்கே நடைபெறுகின்றது?
..........................................................

ii. வருகிற மாதம் ஒரு கருத்தரங்கு இருக்கின்றது.
..........................................................

iii. கணித வகுப்பு நீர்கொழும்பில் இருக்கின்றது.
..........................................................






**Are** எனும் துணைவினைச் சொல்லை தனியொரு வினைச்சொல்லாக, சாதாரண வினைச்சொல்லைப் போன்று, கையாண்டு அமைக்கப்பட்ட 'உடன்பாடு' வாக்கியங்களை 'வினா' வாக்கியங்களாக மாற்றியமைத்தல்.

(அ) You are in the class.
நீ வகுப்பில் இருக்கின்றாய். (உடன்பாடு வாக்கியம்)

**குறிப்பு:-** மேற்படி 'உடன்பாடு' நிலை வாக்கியத்தில் காணப்படுகின்ற 'are' எனும் துணைவினைச் சொல்லை, அவ்வாக்கியத்தின் முன்னிலையில் இடம் பெறச் செய்கின்றபோது, அவ்வாக்கியம் 'வினா' வாக்கியமாக மாற்றமடைகின்றது. உதாரணத்தை இங்கே அவதானிப்போம்.

(ஆ) Are you in the class?
நீ வகுப்பில் இருக்கின்றாயா? (வினா வாக்கியம்)

✱ இவ்வாறே, ஏனைய வாக்கியங்களையும் அமைக்கலாம்.

(அ) You all are in the class.
நீங்கள் அனைவரும் வகுப்பில் இருக்கின்றீர்கள். (உடன்பாடு)

(ஆ) Are you all in the class?
நீங்கள் அனைவரும் வகுப்பில் இருக்கின்றீர்களா? (வினா)

---

(அ) They are in the office.
அவர்கள் அலுவலகத்தில் இருக்கின்றார்கள். (உடன்பாடு)

(ஆ) Are they in the office?
அவர்கள் அலுவலகத்தில் இருக்கின்றார்களா? (வினா)

(அ) They are in the cage.
அவை கூட்டில் இருக்கின்றன. (உடன்பாடு)

(ஆ) Are they in the cage?
அவை கூட்டில் இருக்கின்றனவா? (வினா)

**குறிப்பு:** They - அவர்கள் (உயர்திணை), They - அவை (அஃறிணை)

(அ) They are your friends.
அவர்கள் உனது நண்பர்கள் ஆவார்கள்.

**குறிப்பு:-** இங்கு 'are' என்பதற்கு 'ஆவார்கள்' என்றே தமிழில் அர்த்தம் கொள்ளவேண்டும்.

(ஆ) Are they your friends?
அவர்கள் உனது நண்பர்களா?

**குறிப்பு:** இவ்வினா வாக்கியத்தில் 'are' என்பதற்கு தனியான அர்த்தம் கொள்ளப்படுவதில்லை. இங்கே 'are' எனும் வினைச்சொல் 'தோன்றா வினை' என்றே கொள்ளப்படுகின்றது.

(அ) You are a driver.
நீ ஒரு சாரதி ஆவாய். (உடன்பாடு)

(ஆ) Are you a driver?
நீ ஒரு சாரதியா? (வினா)

---

(அ) The children are in the class.
அந்தப் பிள்ளைகள் வகுப்பில் இருக்கின்றார்கள். (உடன்பாடு)

(ஆ) Are the children in the class?
அந்தப் பிள்ளைகள் வகுப்பில் இருக்கின்றார்களா? (வினா)

(அ) They are your books.
அவை உனது புத்தகங்கள் ஆகும். (உடன்பாடு)

(ஆ) Are they your books?
அவை உனது புத்தகங்களா? (வினா)

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாக சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.

அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# பாகிஸ்தான் பிரதம நீதியரசர் மீண்டும் பதவியில்....

பாகிஸ்தானில் பதவி நீக்கம் செய்யப்பட்ட உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி மொஹமட் சௌத்ரியை மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு அந்நாட்டு அரசாங்கம் இணக்கம் தெரிவித்ததையடுத்து, அங்கு சுமுகநிலை தோன்றியுள்ளது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் அப்போதைய பாகிஸ்தான் ஜனாதிபதியாக இருந்த முஷாரஃப்பினால் மேற்படி தலைமை நீதிபதி பணிநீக்கம் செய்யப்பட்டிருந்தார். பின்னர் பதவிமாற்றம் நடைபெற்ற பின்னரும் கூட தலைமை நீதிபதி மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளப்படாததையிட்டு பெரும் அதிருப்தி நிலவி வந்தது.



இத்தகைய நிலையில் எதிர்க்கட்சித் தலைவரான நவாஸ் ஷெரீப், சட்டத்தரணிகளுடன் இணைந்து தலைமை நீதிபதியை பதவியில் சேர்க்குமாறு கோரி ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றிற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

இதனைக் கேள்வியுற்ற ஆளும் கட்சி ஷெரிஃபை வீட்டுக்காவலில் வைக்கும் உத்தரவை பிறப்பித்தது. எனினும், அந்த உத்தரவை உதாசீனம் செய்தவாறு ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்து கொண்டார் ஷெரீஃப். நிலைமை கட்டுக்கடங்காமல் செல்வதை உணர்ந்த ஜனாதிபதி கிலானி தொலைக்காட்சி வழியே நாட்டு மக்களுக்கு உரையொன்றை நிகழ்த்தினார். அதன்போது, பிரதம நீதியரசர் சௌத்ரியை மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்வதாக அறிவித்தார். இந்த அறிவிப்பையடுத்தே ஆர்ப்பாட்டங்கள் முடிவிற்கு வந்ததுடன், நாட்டில் சுமுக நிலையும் திரும்பியது.



## சிம்பாப்வேக்கு உதவ நாணய நிதியம் விருப்பம்



வருடக் கணக்காக பொருளாதார சிக்கலிலுள்ள சிம்பாப்வே நாட்டிற்கு உடனடியாக உதவிகளை வழங்குவதற்கு தயாராக இருப்பதாக சர்வதேச நாணயநிதியம் அறிவித்துள்ளது. இதற்கமைய எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் இது தொடர்பாக கலந்தாலோசிக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

மேற்படி உதவிகளை வழங்குவது தொடர்பாக சர்வதேச நாணயசபையின் உறுப்பினர்கள் உலக வங்கி பிரதிநிதிகளுடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகள் வெற்றி பெற்றுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிம்பாப்வேயில் அந்நாட்டின் ஜனாதிபதி ரொபர்ட் முகாபே சர்வாதிகார ஆட்சி நடத்துவதாலும் மக்களுக்கு போதிய ஜனநாயக சுதந்திரத்தை வழங்காததாலும் உலக நாடுகள் சிம்பாப்வேக்கு எவ்வித பொருளாதார உதவிகளையும் வழங்குவதில்லை என்று கடந்த காலங்களில் தீர்மானித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## வடகொரியாவின் அடுத்த ஜனாதிபதிக்கான ஆராய்வு

வட கொரியாவில் அடுத்த ஜனாதிபதி பதவிக்கு அந்நாட்டின் தற்போதைய ஜனாதிபதியின் மகனை நியமிப்பதற்கு அந்நாட்டின் ஆளும் கட்சியும் இராணுவமும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி கிம் கடந்த ஓகஸ்ட் மாதத்தின்போது சுகவீனமுற்றதுடன் தற்போது அவர் தேறி வருவதாகவும் கூறப்படுகின்றது. தற்போது 67 வயதாகின்ற ஜனாதிபதி 'கிம்'மின் உடல் நிலை ஒத்துழைக்காத காரணத்தினால் அவருக்குப் பதிலாக பணியாற்றக்கூடிய ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டிய நிலை குறித்து பல்வேறு தரப்பிலும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது உலகின் கம்யூனிச நாடான வடகொரியாவின் தலைமைப் பதவி அதன் பரம்பரையைச் சேர்ந்த ஒருவருக்கே வழங்கப்பட வேண்டும் என்று ஆளும் கட்சியான தொழிற்கட்சியினர் சுற்றறிக்கையொன்றை கடந்த டிசம்பர் மாதத்தில் அதன் சிரேஷ்ட தலைவர்களுக்கு அனுப்பி வைத்தது. குறித்த சுற்றறிக்கையினை கவனத்தில் கொண்ட சிரேஷ்ட தலைவர்கள் அதனை ராணுவ அதிகாரிகளின் கவனத்திற்கும் அனுப்பி வைத்தனர்.

அடுத்த ஜனாதிபதியாக யாரை நியமிக்க வேண்டும் என்று அதில் நேரடியாக குறிப்பிடாதபோதிலும் ஜனாதிபதி 'கிம்'மின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரே அப்பதவிக்கு நியமிக்கப்படல் வேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவின் அடுத்த பிரதமர் யார்?

### பந்தயக்காரர்களின் கணிப்பு

இந்தியாவில் நடைபெறவுள்ள தேர்தலில் தற்போதைய ஆளும் கட்சிப் பிரதமர் மன்மோகன் சிங் மீண்டும் பிரதமராக வெற்றி பெறுவார் என்று இந்தியாவின் பிரபல தேர்தல் பந்தயக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.



நடைபெறவுள்ள தேர்தலில் யார் வெற்றி பெறுவார்? என்று பலர் பந்தயப் பணம் செலுத்தி வருகின்ற நிலையில், இதில் எந்தக் கட்சி வெற்றி பெறும் என்று அதிகமானோர் பந்தயம் கட்டுகின்றனர் என்பதை உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர் தேர்தல் பந்தய (புக்கி) நிறுவனத்தினர்.

இந்தியாவில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி ஆரம்பமாகின்ற தேர்தலானது பல கட்டங்களாக நடைபெற்று மே மாதம் 13 ஆம் திகதி நிறைவு பெறும்.

இதையிட்டு கருத்துத் தெரிவிக்கின்ற தேர்தல் பந்தய நிறுவனத்தினர் பிரதான எதிர்க்கட்சியான பி.ஜே.பி. கட்சியின் தலைவர் அத்வானியை விட காங்கிரஸ் கட்சியின் மன்மோகன் சிங் ஓரளவு முன்னிலையைப் பெற்றுள்ளார் என்று குறிப்பிடுகின்றனர்.

இதுவரை டொலர் மில்லியன் கணக்கில் இந்த தேர்தல் குறித்து பந்தயப் பணம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இரண்டரைப் பேரில் ஒருவர் மன்மோகன் சிங் வெற்றி பெறுவார் என்றும், ஐந்து பேரில் ஒருவர் அத்வானி வெற்றி பெறுவார் என்றும் பந்தயம் பிடித்துள்ளதாக விகிதாசாரத்தின்படி கூறப்படுகின்றது.

543 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத்திற்கான தேர்தலில் காங்கிரஸ் கட்சி 201 ஆசனங்களையும் பி.ஜே.பி கட்சி 195 ஆசனங்களையும் இடதுசாரிக் கட்சிக்கு 92 ஆசனங்களும் கிடைக்கலாம் என்றும் இதன்மூலம் கணிக்கப்பட்டுள்ளது.

**அற்லஸ் கேள்வி - 196**

**கேள்வி: இந்தியாவின் பி.ஜே.பி கட்சித் தலைவரின் பெயர் என்ன?**

சரியான விடை........................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 196,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 194 இன் சரியான விடை: லீ ரெட்மன்ட்**

பரிசு பெறுவோர்

நூருல் ஹஸ்னா,
411, புதிய தெரு, வெலிகாமம்.

துஷாந்தி,
8A, பெனிகுயிக் வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு-06.

ஐ.அப்ளஸ் ஹஸன்,
8A, பதூரியா வீதி, மாவனெல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று நூற்றாண்டுகள் வாழ்ந்த முதல் மனிதர்!

ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த பெஞ்சமின் ஹெரிசன் ஹோல்கோம்ப் என்ற மனிதரே மூன்று நூற்றாண்டுகள் வாழ்ந்த முதல் மனிதராகத் திகழ்கின்றார்.

இவர் 2000 ஆம் ஆண்டு மார்ச் 3 ஆம் திகதி தனது 111 ஆவது பிறந்தநாளை வெற்றிகரமாகக் கொண்டாடினார். அதனை படுத்தபடுக்கையில் இருந்து அவர் கொண்டாடவில்லை. நன்கு ஆரோக்கியமான நிலையிலேயே கொண்டாடினார் என்பதுதான் ஆச்சரியமான தகவல். 3 நூற்றாண்டுகள் வாழ்ந்தவர்கள் என மேலும் சிலர் பெருமைப்பட்டுக் கொண்டாலும் இவரிடம் காணும் விசேடம் என்னவென்றால், இவரின் பிறப்பு ஆதாரபூர்வமாகப் பதிவு செய்யப்பட்டிருந்ததாகும். 1889 ஆம் ஆண்டு ஜூலை 3 ஆம் திகதி பிறந்த பெஞ்சமின் ஹெரிசன் ஹோல்கோம்ப் தனது 111 ஆவது வயதிலும் சுறுசுறுப்பாக வாழ்ந்தார். முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டன் இவரை நேரில் சென்று சந்தித்து புகைப்படமும் எடுத்துக் கொண்டார்.



ஹோல்கோம்ப் எந்த ஒரு விடயத்தையும் மனதில் தேக்கி வைத்துக்கொள்வதில்லை. எல்லாவற்றையும் மறந்துவிடும் குணம் கொண்டவர். இதனால்தான் இவரால் 111 வயதிலும் ஆரோக்கியமாக வாழ முடிந்ததாக அவர் கூறுகின்றார். நீண்டநாள் வாழவிரும்பினால் எப்போதும் திறந்த மனதுடன் மகிழ்ச்சியாக நம்பிக்கையுடன் வாழுங்கள். கீரை, கேழ்வரகு, வெங்காயம், மீன், தக்காளி, பாதாம் பருப்பு, பேரீச்சம்பழம், திராட்சைப்பழம் முதலியனவற்றை தினமும் உங்கள் உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள். இவற்றில் உள்ள கல்சியம்,பொட்டாசியம், மெக்னீசியம், விற்றமின்-சி என்பன உங்கள் ஆயுளை நீடிக்க வைக்கும். அத்துடன், எல்லோரையும் மன்னித்து விடும் மனப்பான்மையுடன் இருங்கள். கருணையுடன் நடந்து கொள்ளுங்கள். நேர்மையாக வாழுங்கள். இவை அனைத்தும் நீண்டநாள் வாழ வழிவகுக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஹோல்கோம்ப்பின் நீண்ட ஆயுளுக்குரிய காரணம் என்ன தெரியுமா? காலையில் மட்டும் ஓட்ஸ் கஞ்சியை நிறையக் குடிப்பதும் பின்னர் எதுவுமே சாப்பிடாமல் இருப்பதும்தான் என்கிறார் அவர். யாரேனும் காயப்பட்டால் அல்லது விலங்குகள் காயப்பட்டால் ''ஓ''வென்று கதறி அழுது தனது கவலையை தீர்த்துக்கொள்வாராம் ஹோல்கோம்ப். இதுவும் அவரது நீண்ட ஆயுளின் ரகசியமாம். இவர் முதிய வயதிலும் கடுமையாக விவசாயத்தில் ஈடுபட்டதும் குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே 120 வயதில் ஜப்பானியர் ஒருவர் வாழ்ந்தார். அவர் 120 வயதைக் கடந்து மேலும் 237 நாட்கள் வாழ்ந்து 1986 ஆம் ஆண்டு காலமானார். அவருக்குப் பின் உயிருடன் ஆரோக்கியமாக இருந்த முதல் மனிதராக ஹோல்கோம்ப் கின்னஸில் இடம்பெற்றுள்ளார்.



1968 ஆம் ஆண்டு 500,000 அமெரிக்க டொலர் செலவில் தயாரிக்கப்பட்ட கார்தான் உலகில் அதிக செலவில் தயாரிக்கப்பட்ட காராக விளங்கியது. இது அப்போது பதவியிலிருந்த அமெரிக்க ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்ஸனுக்காகத் தயாரிக்கப்பட்டது.


# அதிக செலவில் தயாரிக்கப்பட்ட கார்

இலங்கை நாணய மதிப்பில் ஏறக்குறைய 7 கோடி ரூபா பெறுமதியுடையது. இதன் நிறையோ 5.43 தொன். இது குண்டு துளைக்காத 'புல்லட் புரூப்'காராகும்.ஆனால்,பில் கிளிண்டன் ஜனாதிபதியாக இருக்கும்போது பயன்படுத்திய அவரது சொந்தக்காரோ இதைவிட பல நவீன வசதிகளைக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. அது கண்ணி வெடியிலிருந்து பாதுகாப்பாக தப்பிவிடக்கூடிய விதத்தில் தயாரிக்கப்பட்டிருந்தது.


# பலூனில் உலகை வலம் வந்தவர்கள்

ஐரோப்பாவின் சுவிற்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த பெர்ட்ராண்ட் பிக்கார்ட் என்பவரும் இங்கிலாந்தைச் சேர்ந்த ப்ரயன் ஜோன்ஸ் என்பவரும் இணைந்து வெப்பக் காற்றமுத்த பலூன் மூலம் எவ்விடத்திலும் தரிக்காமல் உலகை முதன்முதலாக சுற்றி வந்தார்கள்.

இருமுறைகள் இவர்கள் இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர். ஆனால், பலனளிக்கவில்லை. அந்த முயற்சிகள் தோல்வியிலேயே முடிந்தன. காற்று சாதகமாக இல்லாதமையே இந்தத் தோல்விக்குக் காரணம். எனினும், இவர்கள் மனம் தளரவில்லை. மீண்டும் முயற்சித்தனர். அவர்களின் விடாமுயற்சி அவர்களுக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தது. காற்று சாதகமாக அமைந்ததை அடுத்து 45,755 கிலோமீற்றர் தூரத்தை 19 நாட்களில் பயணித்து தரையிறங்கினர். புகழ்பெற்ற எகிப்திய 'கிஸா பிரமிட்' அருகில் தரையிறங்க இவர்கள் அனுமதி கேட்டிருந்தபோதும் போதிய காற்று இல்லாத காரணத் தால் எகிப்து நாட்டின் மற்றொரு பகுதியில் இவர்கள் வெற்றிகரமாக தரை இறங்கினார்கள். இந்த நிகழ்வு 1999 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ஆம் திகதி நிகழ்ந்தது.



20ஆம் நூற்றாண்டின் இறுதியில் இவர்கள் செய்த இணையற்ற சாதனைக்குப் பிறகே ஐக்கிய அமெரிக்காவின் பாஸெட் என்ற 53 வயது தொழிலதிபர் ஒருவர் 2002 ஆம் ஆண்டில் வெப்பக் காற்றமுத்த பலூன் மூலம் தனியொருவராக உலகைச் சுற்றி வந்தார்.பாஸெட்டின் ஐந்து முயற்சிகளும் தோல்வியில் முடிந்தோடு, ஆறாவது முயற்சியே வெற்றிகரமாக அமைந்தது.




# முதல் காசோலையை அறிமுகப்படுத்திய வங்கி

இன்று பணத்தை ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்குக் கொண்டு செல்வது பெரும் பிரச்சினையாகி விட்டது. பாதுகாப்பின்மை அதிகரித்துச் செல்வதே இதற்குரிய முக்கிய காரணமாகும். அதனால், பணத்தை வைப்பிலிடவும் மீளப்பெறவும் வங்கிகள் எத்தனையோ வசதிகளை அறிமுகப்படுத்தியுள்ளன. அவற்றில் ஒன்றுதான் காசோலை.

அந்தவகையில், கி.மு 600 இல் சீனாவில் ஷான்சி வங்கியே (Shanxi Bank) முதன்முதல் காசோலை முறையை அறிமுகப்படுத்தியது. இந்த வங்கிதான் ஒரு மாகாணத்திலிருந்து இன்னொரு மாகாணத்திற்கு பணத்தை மாற்றிக் கொடுக்க 3 சதவீத கட்டணம் வசூலித்தது. இதன்மூலம் 'டிராப்ட்' முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்தகைய வசதிகளால் வியாபாரிகள்,உல்லாசப் பயணிகள் வெளியூர்களுக்குச் செல்லும்போது வெள்ளி மற்றும் பொன் நாணயங்களை பெரிய பைகளில் தூக்கிக்கொண்டு போகமாட்டார்கள். வங்கியில் செலுத்தியதற்கான சான்றிதழ், செக், 'டிராப்ட்' முதலியவற்றுடன் பயணித்து தாம் விரும்பும் வேறொரு ஊரில் பொன்னையும் வெள்ளியையும் வங்கியில் இருந்து எடுத்துப் பயன்படுத்தினார்கள்.

கி.பி 18 ஆம் நூற்றாண்டில்தான் காகிதப் பணம் அதாவது ரூபா நோட்டு பாவனைக்கு வந்தது. ஷான்சி வங்கியின் இந்த முறையைப் பின்பற்றியே வங்கியில் வைப்புச் (Deposit) செய்தல், அதற்குரிய பத்திரம் வழங்கும் முறை என்பன உலகில் தோன்றியன எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசிலீசா கரும்புருவ வேலைக்காரியிடம் விரைந்து சென்று தாழ வணங்கி, ''என்னைக் காப்பாற்று'' என்று கூறி அழுதாள். ''நீ சூட்ட டுப்பை மூட்டுகின்றபோது விறகுக்கு மேலாகத் தண்ணீரை ஊற்று. உன்னுடைய சிரமத் திற்குப் பரிசாக இதோ என்னு டைய பட்டுத் தலைக்குடை''

கரும்புருவ வேலைக்காரி பதில் சொன்னாள், ''நல்லது, கண்ணே நான் உனக்கு உதவி செய்வேன். சூட்டடுப்பைச் சூடாக்க நான் நிறையநேரத்தை எடுத்துக்கொள்வேன்.




பாபா-யகாவை இரவு முழுக்க அயர்ந்து தூங்க வைக்கிறேன். நீ ஓடிப்போய் விடு, வசிலீசா!''

''ஆனால், அந்த மூன்று குதிரைக்காரர்களும் என்னைப் பிடித்துத் திரும்பவும் கொண்டு வந்து விடமாட்டார்களா?''

''ஓ..... மாட்டார்கள்'' என்று கரும்புருவ வேலைக்காரி பதிலளித்தாள்.

''வெள்ளைக் குதிரைக்காரன் பிரகாசமான பகல், சிவப்புக் குதிரைக்காரன் பொன்னிறச் சூரியன், கறுப்புக்குதிரைக் காரன் கருமையான இரவு, அவர்கள் உன்னைத் தொடமாட்டார்கள்''

வசிலீசா வெளியே நடை பாதைக்கு ஓடினாள். உடனே முறுமுறுப்பான பூனை அவளிடம் விரைந்து பிறாண்ட வந்தது. ஆனால், அவள் அதற்கு ஒரு பணியாரத்தை வீசியெறியவே, அவளை அது தொடவில்லை.வசிலீசா முற்றத் திற்கு ஓடிய போது நாய் பாய்ந்து அவளைக் கடிக்க வந்தது. ஆனால், அதனிடம் அவள் ஒரு ரொட்டித்துண்டை வீசவே, அது அவளைப் போக விட்டது. வசிலீசா முற்றத்தை விட்டு வெளியே ஓட இருந்த போது பிர்ச் மரம் அவளை விளாசி கண்களைப் பிடுங்க வந்தது. ஆனால், அதை ஒரு நாடாவால் அவள் கட்டவே, மரம் அவளைக் கடந்து போக விட்டது. கடவையும் போக விடாமல் மூட இருந்தது. ஆனால், வசிலீசா அதனது கீல்களுக்கு மசகு தடவவே அது அகலத் திறந்துகொண்டது.

இருண்ட காட்டிற்குள்ளாக வசிலீசா ஓடினாள். அந்த நேரத்தில் கறுப்புக் குதிரைக்காரன் பாய்ச்சலில் வரவே, சுற்றிலும் ஒரே இருள்மயமானது. நெருப்பு இல்லாமல் அவளால் எப்படி

**இருண்ட காட்டிற்குள்ளாக வசிலீசா ஓடினாள். அந்த நேரத்தில் கறுப்புக் குதிரைக்காரன் பாய்ச்சலில் வரவே, சுற்றிலும் ஒரே இருள்மயமானது.**

வீட்டிற்குத் திரும்பிப் போகமுடியும்? மாற்றாந்தாயிடம் அவள் என்ன சொல்வாள்? மாற்றாந்தாய் அவளைக் கொல்லவும் செய்வாள். ஆகவே, தனக்கு உதவுமாறு பொம்மையிடம் கேட்டாள். அது சொல்லியபடி

செய்தாள். வேலியிலிருந்து மண்டை யோடு ஒன்றை எடுத்து, ஒரு குச்சியின் உச்சியில் அதை வைத்துக்கொண்டு காட்டின் குறுக்கே புறப்பட்டுச் சென்றாள். அதன் கண்கள் மின்னின. கறுப்பு இரவு பகல் போல வெளிச்ச மாகியது. பாபா-யகா விழித்தெழுந்து சோம்பல் முறித்தாள். வசிலீசா போய் விட்டதை அறிந்ததும் வெளியே நடை பாதைக்கு விரைந்தாள்.

''முறு முறுப்பானே,



வசிலீசா உன்னைக் கடந்து ஓடியபோது அவளை நீ பிராண்டினாயா?'' எனக் கேட்டாள். முறுமுறுப்பான பூனை பதில் சொன்னது, ''இல்லை, அவளை நான் போகவிட்டேன். ஏனெனில், அவள் எனக்குப் பணியாரம் தந்தாள். பாபா-யகா நான் உனக்குப் பத்து ஆண்டுகள் சேவை செய்திருக்கிறேன். ஆனால், நீ எனக்கு ஒரு

ரொட்டித்துண்டு கூடத் தந்ததில்லை''

பாபா-யகா வெளியே முற்றத்திற் குள்ளாக விரைந்தாள். ''வசிலீசாவை நீ கடித்தாயா... எனது நன்றியுள்ள நாயே?'' எனக் கேட்டாள்.

நாய் பதில் சொன்னது, ''இல்லை, அவளை நான் போகவிட்டேன். ஏனெனில், அவள் எனக்குக் கொஞ்சம் ரொட்டி கொடுத்தாள். அநேக ஆண்டு களாக உனக்கு நான் சேவை செய்திருக் கிறேன். ஆனால், நீ எனக்கு ஒரு எலும்பு கூடத் தந்ததில்லை''

''பிர்ச் மரமே, பிர்ச் மரமே!'' பாபா-யகா கர்ஜித்தாள். ''நீ வசிலீசாவின் கண்களைப் பிடுங்கினாயா?'' பிர்ச் மரம் பதில் பேசியது, ''இல்லை, அவளை நான் போகவிட்டேன். ஏனெனில், அவள் ஒரு நாடாவால் எனது கிளைகளைக் கட்டினாள். நானும் இங்கே பத்து ஆண்டுகளாக வளர்ந்தி ருக்கிறேன். ஒரு கயிற்றால் கூட நீ என்னைக் கட்டியது இல்லை'' பாபா-யகா கடவையிடம் ஓடினாள்.

''கடவையே, கடவையே'' கத்தினாள். ''வசிலீசா கடந்து போகும் முன்பே நீ சாத்திக்கொண்டாயா?'' கடவை பதில் சொன்னது,

''இல்லை, அவளை நான் போகவிட் டேன். ஏனெனில், எனது கீல்களுக்கு அவள் மசகு தடவினாள். நீண்ட காலமாக உனக்கு நான் சேவை செய்தி ருக்கிறேன். ஆனால், அவற்றின் மீது நீ தண்ணீர் கூட விட்டதில்லை''

பாபா-யகா சீற்ற மடைந்தாள். நாயை விளாசவும், பூனையை அடிக்கவும் கடவையை உடைக் கவும், பிர்ச் மரத்தை வெட்டவும் தொடங்கினாள். அதனால், அவள் பெரும் களைப்படையவே வசிலீசா வைப் பின்தொடர்ந்து போகவில்லை. வசிலீசாவோ வீட்டிற்கு ஓடினாள். வீட்டிற்குள் விளக்கு இல்லை என்பதை கண்டாள்.அவளது மாற்றாந்தாய்ச் சகோதரிகள் வெளியே விரைந்து வந்து அவளைக் கண்டிக்கவும் திட்டவும் தொடங்கினர். (தொடரும்....)



மலையடிவாரமொன்றில் அதிகமான புல்வெளிகள் இருந்தன. அங்கு விளையும் புற்கள் மிகவும் சுவையாகவும் சத்துள்ளவையாகவும் இருந்தன. அவற்றை மேய்ந்த ஆடு, மாடுகள் நிறையப் பால் கொடுத்தன. பால் நிறையக் கிடைத்தது மல்லாமல் பாலில் போஷாக்கு சத்துக்கள் அதிகமாகவும் இருந்தன.

# தன்வினை

அதனால், ஆடு, மாடு வளர்ப்பவர்கள் அந்த மேய்ச்சல் தரைக்கே தங்கள் கால்நடைகளை ஓட்டிச் செல்கின்றனர். ஆடுகளும் அப்புல்லை வயிறார சாப்பிட்டு குண்டு குண்டாக இருந்தன. இவ்வாறாக ஆடுகள் கொழுத்திருப்பதைப் பார்த்துவிட்டது ஒரு ஓநாய். அது அந்தப் புல் தரையை ஒட்டிய காட்டிலேயே வசித்து வந்தது. காட்டில் சின்னச் சின்ன முயல்களையும் காட்டுச் சேவல்களையும் மட்டுமே தின்றுவந்த ஓநாய்க்கு கொழு கொழுவென்று இருந்த ஆடுகளைப் பார்த்ததும் அவற்றையும் சாப்பிட வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஒரே ஆடுகள் மயமாக இருந்ததால் ஓநாய், தன் வெகு நாளைய உணவுப் பஞ்சம் தீரப் போகிறது என்றெண்ணி சந்தோஷப்பட்டுக் கொண்டது. ஆனால், அதன் துர்பாக்கியம் ஒரு ஆட்டைக்கூட சாப்பிட முடிய வில்லை. ஏனெனில், ஆடு மேய்ப்பவர்கள் மிகவும் கவனமாக இருந்தனர். ஆடுகள் எங்காவது காணாமல் போய் விடக்கூடாதே என்று கண்ணில் விளக் கெண்ணையை விட்டுக் கொண்டு அவர்கள் தங்கள் மந்தையிலுள்ள ஆடுகளைக் கண்காணித்தனர். அதனால், ஓநாயால் ஒரு ஆட்டைக் கூட கொன்று சாப்பிட முடி யாமல் போய்விட்டது. தினம் ஒரு ஆட்டை சாப்பிடலாமென்று அது ஆசைப் பட்டது. ஆனால், அப்போது அது காட்டில் இருந்து தற்போதைய நிலையில் அதற்கு ஒரு ஆடு கூட கிடைக்காது போனது. மிகவும் ஏமாற்றமாகப் போய் விட்டது. அதனால், என்ன செய்தால் ஆட்டை சாப்பிடலாமென்று ஓநாய் யோசித்தபடி நடந்து சென்றது.

அப்போது, அது காட்டில் இருந்து ஆடுகளைக் கொன்று அதன் இறைச்சியை விற்பனை செய்யும் கசாப்புக்கடைக்காரர்கள் இருக்கும் பகுதிக்கு வந்தது. அவர்கள் கொன்ற ஆடுகளின் தோல்களை வேலியோரமாக காயப் போட்டிருந் தனர். ஒவ்வொரு தோலும் முழு ஆட்டின் அளவில் இருந்தது. அதைப் பார்த்ததும் ஓநாய்க்கு ஒரு யோசனை தோன்றியது. தான் ஒரு ஆட்டின் தோல் எடுத்து போர்த்திக் கொண்டு ஆட்டு மந்தைக்குள் நுழைந்துவிட்டால் ஆடு மேய்ப்பவன் தன்னையும் ஒரு ஆடு என்றே எண்ணிக்கொள்வான்.

அத்தோடு, வேறு ஏதோ ஒரு மந்தையிலிருந்து வந்த ஒரு ஆடு நம் மந்தையில் சேர்ந்துவிட்டது, நமக்கு லாபம்தான் என்றும் எண்ணுவான். அதனால், தனக்கு ஆபத்து ஒன்றுமிருக்காது என்று எண்ணியது ஓநாய். வேலியோரமாக பதுங்கிச் சென்று ஒரு பெரிய ஆட்டின் தோலை கௌவி மெதுவாக இழுத்துக்கொண்டு காட்டுக்குள் சென்றது. ஆட்டுத்தோலை தன் மீது போர்த்திக் கொண்டு சிறிது நடந்து பார்த்தது. இரவு முழுவதும் மகிழ்ச்சியில் அது புதரில் தூங்கவேயில்லை. மறுநாள் ஆட்டுத்தோலை போர்த்திக் கொண்டு ஆட்டு மந்தையினுள் நுழைந்து நன்கு கொழுத்த ஆட்டை வேட்டையாடி சாப்பிடப் போகிறோம் என்கிற சந்தோ ஷத்தில் அது இருந்தது. மறுநாள் ஆட்டுத் தோலைப் போர்த்திக் கொண்டு பொழுதுசாயும் நேரத்தில் மெதுவாக ஆட்டு மந்தைக்குள் நுழைந்துவிட்டது. இனி சாப்பாட்டுக்கு கஷ்டமே கிடையாது என்று எண்ணியது ஓநாய்.

பொழுது சாய்ந்ததும் ஆடுகளை மந்தையில் அடைத்தான் ஆட்டுக்காரன். அப்போது அவன் மனைவி, ''நாளைக்கு பண்டிகை எல்லோரும் ஆட்டு இறைச்சி சாப்பிடுவார்கள். நாமும் சாப்பிட வேண்டாமா? நம் மந்தையிலுள்ள ஆடுகளில் நன்கு கொழுத்த ஆட்டைப் பார்த்து இப்பொழுதே வெட்டுங்கள். இறைச்சியை சுத்தம் செய்து பொழுது விடியும் முன் சமைத்து வைத்துவிட்டு, அதிகாலையில் எழுந்து பண்டிகையை கொண்டாடவேண்டும்'' என்றாள். உடனே ஆட்டுக்காரன், மந்தையில் ஆட்டுத் தோலை போர்த்திக் கொண்டிருந்த ஓநாயைப் பார்த்து, ''இது தான் நம் வீட்டுப் பண்டிகை விருந்துக்கு சரியான ஆடு'' என்று கூறி கத்தியால் ஓநாயின் தலையில் ஒரே போடாகப் போட்டான். அதன் தலை துண்டாக கீழே விழுந்தது.



நாம் மற்றவர்களைப் போன்று பாசாங்கு செய்தால் அவர்களுக்கு விளையும் தீமை நமக்கும் விளையும் என்பதை இதன்மூலம் அறிந்து கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கிரிக்கெட் அணியினரின் உயிர்காத்த துணிச்சல் வீரன் 'கலீல்'

**டெஸ்ட் போட்டித் தொடரில் கலந்து கொள்வதற்காக பாகிஸ்தான் சென்றிருந்த இலங்கை கிரிக்கெட் அணியினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்று வீரர்கள் அனைவரும் மயிரிழையில் உயிர்பிழைத்தமை நாம் அறிந்ததே.**



இலங்கை அணியினர் இவ்வாறு உயிர் தப்பியமைக்கு அவர்கள் பயணம் செய்த பஸ்ஸின் ஓட்டுனரே காரணகர்த்தாவாக இருந்தார்.அவரது சமயோசிதத்தன்மையும் துணிச்சலுமே இலங்கை வீரர்களை காப்பாற்றியது எனலாம். பஸ்ஸை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்று கொண்டிருக்கையில் அதிர்ச்சியில் உறைந்து போகாமல் சமயோசிதமாக பஸ்ஸை நிறுத்தாமல் சுமார் அரை மைல் தூரத்திற்கு வேகமாக பஸ்ஸை அவர் ஓட்டிச் சென்று 'கடாஃபி' மைதானத்தை அடைந்தார். இதனாலேயே இலங்கை வீரர்களும் அணியின் வெளிநாட்டுப் பயிற்சியாளர்களும் உயிர் தப்பினர்.

## புறப்படுதல்

அன்று 3 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலையில் இலங்கை அணியினர் போட்டிற்குச் செல்வதற்கான ஆயத்தங்களைச் செய்துகொண்டு காலை 8.30 மணியளவில் விளையாட்டரங்கிற்குச் செல்வதற்காக பஸ்ஸில் ஏறினர். பஸ் புறப்பட்டுச் சென்று கொண்டு, சுற்றுவட்டமுள்ள ஓர் இடத்தில் திரும்புகையில், யாரோ சிலர் பஸ்ஸை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். முதலாவது வேட்டு பஸ்ஸின் முன்பக்கக் கண்ணாடியை துளைத்துக் கொண்டு ஓட்டுனரின் தலைக்கு அருகாகச் சென்றது. அப்போது எதிர்பாராத விதமாக பஸ் நின்றுவிட்டது. முன் இருக்கையில் அமர்ந்திருந்த திலகரட்ன தில்ஷான் ''பஸ்ஸை நிறுத்த வேண்டாம். முன்னே கொண்டு செல்லுங்கள்'' என்று சத்தமிட்டார். உடனே ஓட்டுனர் பஸ்ஸை தொடர்ந்து அரங்கை நோக்கி வேகமாகச் செலுத்தினார். வீரர்கள் அனைவரும் பஸ்ஸின் தரையோடு குனிந்தவாறு பயணித்தனர்.

## தடுமாறாமை

பஸ்ஸின் ஓட்டுனர் கலீல் நடப்பதை நன்றாக கண்ணுற்றமையால் இலங்கை அணியினரைப் பாதுகாக்கக் கூடியவர் தான் மாத்திரமே என்பதை அவர் உணர்ந்து கொண்டார். என்றாலும் பஸ்ஸின் டயரில் துப்பாக்கிச் சூடுபட்டிருந்த அதேவேளை, பஸ்ஸின் இயக்கமும் நின்றிருந்தது. எனினும், துணிச்சலை வரவழைத்துக் கொண்ட ஓட்டுனர், பஸ்ஸை மீண்டும் உயிர்ப்பித்தார் (ஸ்டார்ட்), மறுகணமே தலையைக் கீழாகப் பணித்தவாறே பஸ்ஸை நேரே மைதானத்தை நோக்கிச் செலுத்தினார்.

''பஸ்ஸை நோக்கி ரொக்கட் குண்டுகள் வருவதை நான் கண்டேன். அவற்றுள் ஒரு குண்டு இலக்குத் தவறி மின் கம்பமொன்றில் படுவதையும் பார்த்தேன்; மனதை தைரியப்படுத்திக் கொண்டு வேகமாக பஸ்ஸை செலுத்தினேன். கடவுள் நம்மைக் காப்பாற்றி விட்டார்'' என்று ஓட்டுனர் தெரிவித்துள்ளார்.

## முரளியின் அன்பளிப்பு

ஓட்டுனரின் துணிச்சலான செயலின் காரணமாக தாக்குதல்தாரிகள் பஸ்ஸின் கீழ்ப்புறமாக வீசிய குண்டொன்று பஸ் அவ்விடத்தைக் கடந்த பின்னர்தான் வெடித்தமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணியினர் பாகிஸ்தானிலிருந்து புறப்படுவதற்கு முன்னர் அனைத்து வீரர்களும் பஸ் ஓட்டுனர் கலீலுக்கு தமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்தனர்.

அதுமட்டுமன்றி சுழல் பந்து வீச்சாளரும் உலக சாதனையாளருமான முத்தையா முரளிதரன் தனதுமேலாடை ஒன்றை நினைவுச் சின்னமாக அன்பளிப்பாக வைத்துக்கொள்ளுமாறு ஓட்டுனர் கலீலிடம் கொடுத்துவிட்டார்.

## மனத்தைரியம்

இலங்கை திரும்பிய கையுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கருத்துத் தெரிவித்த இலங்கை அணியின் தலைவர் மஹேலஜயவர்தன ''தான் முகம் கொடுத்த மிகவும் பயங்கரமான அனுபவம் இது'' என்று கூறியதுடன், பஸ் ஓட்டுனரின் துணிச்சலின் காரணமாகவே தானும் சக வீரர்களும் உயிர் தப்ப முடிந்ததாகவும் குறிப்பிட்ட அவர், துப்பாக்கி வேட்டுக்கள் தன்னை நோக்கி வருவது தெரிந்தும் அச்சமின்றி வாகனத்தைச் செலுத்திய அவருக்கு நாம் நன்றிக்கடன் பட்டுள்ளோம். எனவும் தெரிவித்தார்.

மேலும், தங்களுக்காக உயிர்த் தியாகம் செய்த பாகிஸ்தான் பொலிஸாரதும் ஏனையோரதும் குடும்பத்தினருக்கும் தனது ஆழ்ந்த கவலையையும் அவர் தெரிவித்தார்.

## கலீல் கூறுவது;


இருப்பத்திரண்டு வருட காலமாக வாகன ஓட்டுனராகப் பணியாற்றி வருகின்ற கலீல் அவர்கள் இந்த சம்பவத்தைப் பற்றித் தெரிவிக்கையில், ''பஸ்ஸை நோக்கி இருபுறமும் இருந்து துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டுக் கொண்டிருந்தபோது, பாதுகாப்புப் படையினர் தாக்குதல்தாரிகளுக்கு எதிராக பதில் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் இவ்வாறு பதிலடி நடத்திக் கொண்டிருந்தமையால்தான் அந்த அவகாசத்தைப் பயன்படுத்திக்கொண்டு பஸ்ஸை அவ்விடத்திலிருந்து நகர்த்திச் சென்று எல்லோரையும் காப்பாற்ற முடிந்தது. நான் பஸ்ஸை ஓட்டிச் செல்கையில் தாக்குதல்தாரிகளுக்கு எதிராக தாக்குதலை நடத்தி உயிரிழந்த படையினருக்கு எனது கௌரவத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்'' என்று குறிப்பிட்டுள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முட்டை செய்யும் வித்தை

உணவுப் பொருட்களில் குறிப்பாக அசைவ உணவுகளில் மிகக் குறைந்த செலவில், உடலுக்குத் தேவையான புரதம் உட்பட ஏறக்குறைய அனைத்து ஊட்டச்சத்துக்களும் அடங்கியுள்ள உணவு என்ற பெருமை கோழி முட்டைக்கும் முட்டை சார்ந்த உணவுகளுக்கும்தான் உண்டு!



கடந்த நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த சில ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்ட தகவலின் அடிப்படையில், முட்டை உண்பதற்கு கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும் என்ற கருத்து எழுந்தது. முட்டையில் உள்ள கொழுப்பு (கொலஸ்ட்ரோல்) நமது குருதியில் உள்ள கொழுப்பின் அளவை அதிகமாக்கி, வால்வுகளில் அடைப்பை ஏற்படுத்தி இருதய நோயை உருவாக்கும் என்றும் இது உயிருக்கே ஆபத்தை விளைவிக்கும் என்றும் கருத்துக் கூறப்பட்டது.

ஆனால், 2000ஆம் ஆண்டில் வெளியான ஆய்வுகளின்படி, உணவில் இருக்கும் கொழுப்பிற்கும் குருதியில் இருக்கும் கொழுப்புக்கும் நேரடியான தொடர்புகள் எதுவும் இல்லை என்று கண்டுபிடிக்கப்பட்டது. அத்துடன், முட்டையில் இருக்கும் ஊட்டச்சத்துக்கள் இருதயத்துக்கு நலம் செய்பவையாகவே இருக்கின்றன என்றும் கண்டறியப்பட்டது.


கோழி முட்டையில் அடங்கியுள்ள கொழுப்பு, ஃபோலேட், விற்றமின் A மற்றும் E ஆகியவை இருதயத்துக்கு கொலஸ்ட்ரோலால் ஏற்படக்கூடிய பாதிப்பை சரி செய்யும் அளவுக்குப் பயன்படுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

நாம் உட்கொள்ளும் உணவுகளில் முக்கியமான ஊட்டச் சத்துகளை முட்டையே வழங்குகின்றது. உண்மையில் முட்டை சாப்பிடுபவர்களின் குருதியில் உள்ள கொலஸ்ட்ரோல் அளவு முட்டை சாப்பிடாதவர்களின் குருதியில் உள்ள கொழுப்பின் அளவை விடக் குறைவாகவே இருக்கின்றது. வாரத்துக்கு 2 அல்லது 3 முட்டைகள் சாப்பிடுபவர்களுக்கு மட்டுமன்றி 4 மற்றும் அதற்கு மேலும் சாப்பிடுபவர்களுக்குக்கூட குருதியில் கொலஸ்ட்ரோலின் அளவு குறைவாகவே இருப்பதாக அண்மைய ஆய்வொன்றின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

முட்டையில் புரதம் உட்பட A, D, E, $B_6$ மற்றும் $B_{12}$ ஆகிய விற்றமின்களும் ஃபோலிக் அமிலம், கொலின் (Choline), இரும்பு, கல்சியம், பொஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் போன்ற கனியுப்புகளும் அடங்கியுள்ளன. இதில் முட்டை மஞ்சள் கருவில் விற்றமின்கள்A, D மற்றும் E என்பன அடங்கியுள்ளன.

ஒவ்வொருவர் உடலிலும் கொலஸ்ட்ரோல் என்பது இயற்கையாகவே உற்பத்தி செய்யப்படுகின்றது. ஏனெனில், ஹோர்மோன்களையும் விற்றமின் D யை உருவாக்கவும் கலங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கவும் 'கொலஸ்ட்ரோல்' தேவைப்படுகின்றது. பெரும்பாலும் கல்லீரல்தான் கொலஸ்ட்ரோலை உற்பத்தி செய்கின்றது. தவிர, உணவு மூலம் கிடைக்கும் கொழுப்பு பெரும்பாலும் அசைவ உணவுகள் மூலமே கிடைக்கின்றது. இறைச்சி, மீன், கோழி ஆகிய உணவுகளைப் போல முட்டையும் கொலஸ்ட்ரோல் உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆனால் கொலஸ்ட்ரோல் ஒரு முட்டையின் மஞ்சள் கருவில் 42 மில்லிகிராம்தான் உள்ளது.

மேலும், உடலுக்கு நலம் தரக்கூடிய புரதம் ஒரு முட்டையில் 12.6 கிராம் உள்ளது. அவ்வாறே, முட்டை வெள்ளைக்கருவில் 87% நீரும் 13% மிகக் குறைந்தளவு கொழுப்பும் அடங்கியுள்ளன. இதில் கொலஸ்ட்ரோல் இல்லை என்றும் கூறப்படுகின்றது. அத்துடன், நினைவாற்றலை மேம்படுத்தக்கூடியதும் மூளை விருத்திக்கு



உதவக்கூடிய 'கொலின்' மற்றும் பார்வை இழப்பைத் தடுத்து, பார்வைப் புலனை பாதுகாக்கக்கூடிய 'லியுடீன்' மற்றும் 'ஸியா ஸாந்தின்' (Lutein and Zea Xanthin) ஆகிய சத்துக்களும் முட்டையில் உள்ளன. மேலும், முட்டையிலுள்ள கொழுப்பு முழுவதும் அதன் மஞ்சள் கருவில் மட்டுமே உள்ளது. ஆகவே, கொலஸ்ட்ரோலைத் தவிர்க்க விரும்புபவர்கள் மஞ்சள் கருவை தவிர்த்து விட்டு உட்கொள்ளலாம்.

எனவே, நமது உடல் நலனுக்கு அற்புதமான பல நன்மைகளை வழங்கும் சிறப்பு முட்டைக்கு உண்டு என்பதால் அதை அளவோடு உண்டு ஆரோக்கியமாக வாழ்வோம்!

## அதிகமொழிகள் பேசப்படும் நகரம்

இங்கிலாந்து நாட்டின் தலைநகர் லண்டன் மாநகரம்தான் உலகிலேயே அதிகமொழிகள் பேசப்படும் நகரமாகும். 2000 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஓர் ஆய்வின்படி, 371 மொழிகள் இங்கு பேச்சு வழக்கில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவை தவிர, கூடியளவு ஆபிரிக்க மொழிகளும் இங்கே பேச்சு வழக்கில் உள்ளன. லண்டனில் படிக்கும் சுமார் 8 லட்சம் மாணவர்களில் மூன்று பேரில் ஒருவரே வீட்டில் ஆங்கிலம் பேசுகிறார். ஏனையோர் தங்கள் தாய்மொழியில்தான் பேசுகின்றனர்.

இதில் மற்றுமொரு முக்கிய விடயம் என்னவென்றால், ஆங்கில மொழிக்கு அடுத்ததாக பஞ்சாபி, ஹிந்தி, உருது ஆகிய தெற்காசிய மொழிகள் பேசுபவர்கள் லண்டனில் அதிக எண்ணிக்கையில்



வாழ்கின்றனர். இதற்கடுத்ததாக தமிழ்மொழி பேசுபவர்களின் தொகை லண்டன் மாநகரில் அதிகரித்து வருகின்றதாகவும் கூறப்படுகின்றது.

## மிகப் பெரிய பனிப்பாறை

உலகின் துருவப் பிரதேசங்கள் மற்றும் அதிக உயரமான மலைப்பிரதேசங்களில் பனிப் பாறைகளை அதிகம் காணலாம். பொதுவாக பனிப்பாறைகள் என்றால் சிறியதும் பெரியதுமாகப் பல்வேறு அளவுகளில் இருக்கும்.



ஆனால், அண்டார்டிக் கண்டத்தில் ஒரு நாட்டை விட பெரிதான ராட்சதப் பனிப்பாறை ஒன்று உள்ளது. இது 10,915 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டதுடன் இதன் நீளம் 295 கி.மீற்றராகும். அகலம் 37 கிலோமீற்றராகும். இப்பனிப்பாறை ஜமெய்க்கா நாட்டைவிட பரப்பளவில் பெரியது என்று கூறப்படுகின்றது. இது ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் உருகாத தன்மையுடையதுடன் துருவப்பிரதேசத்தில் அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. ஆனால், துருவப் பிரதேசத்திற்கு வெளியே உள்ள பாறைகளில் இந்தியாவின் இமயமலைப் பிரதேசத்தில் உள்ள 'சியாசின்' பனிப்பாறையே மிகப் பெரிய பனிப்பாறையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 198 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
யோ.நியூஜினி, தரம் - 3,
சென்.தோமஸ் கலவன் பாட., பண்டத்தரிப்பு.


**போட்டி: 02**
அலி அம்மார், தரம் - 3,
தும்மலதெனிய மு.வித்.,
வறக்காப்பொளை.

**போட்டி: 03**
அ.ஜொணார்த்தனன், தரம் - 8,
புனித பேதுரு கல்., கொழும்பு-04.

**போட்டி: 04**
பு.றோகினி, தரம் - $8^B$,
க/கதிரேசன் இந்து ம.கல்., நாவலப்பிட்டி.

**போட்டி: 05** (குறு.போ-209)
எம்.சுலைமான், தரம் - $9^C$,
கா/ஸாஹிரா தே.பாட., கிந்தோட்டை.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 212 — 5




### மேலிருந்து கீழ்

01. நயினா தீவின் பண்டைய பெயர்.
02. தனியாக இருப்பதைக் குறிக்கும்.
03. சேமிப்பு, கடன் வழங்கல் உட்பட பணம் கொடுக்கல்-வாங்கல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளும் நிதி நிறுவனம்.
07. மாலைதீவின் நாணய அலகு.
08. வறுமை-ஒத்தகருத்துச் சொல்.
09. சொல் அல்லது சொற்றொடர் பல பொருள் தருமாறு அமைவது.
11. தாவர வளர்ச்சிக்கு இதன் வளம் அத்தியாவசியம்.

### இடமிருந்து வலம்

01. (பொதுவாக) மங்கல நிகழ்வுகளின்போது இசைக்கப்படும் இசைக்கருவி.
04. பழம்-ஒத்தகருத்துச் சொல்.
05. நன்மை-எதிர்க்கருத்துச் சொல்.
06. எமது உடலுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய கண்ணுக்குப் புலப்படாத உயிரினம்.
10. பெண் யானை.
11. நுளம்பினால் பரவக்கூடிய நோயொன்று.
12. அண்மை/அயல் என்றும் பொருள்படும்.

### குறுக்கெழுத்துப்போட்டி 209 விடைகள்

**மேலிருந்து கீழ்**

01. மிளகு
02. சருமம்
04. கிரகம்
05. ராகம்
07. சிலை
08. பாவை

**இடமிருந்து வலம்**

01. மின்னஞ்சல்
03. குக்கிராமம்
06. ரகம்
07. சிங்கம்
09. எவை

குறுக்கெழுத்துப்
போட்டி -212
"விஜய்"
த.பெ.எண். 2037
கொழும்பு


### பாராட்டுப் பெறுவோர்

வி.சுபலக்ஸ்மி, தரம் - $9^B$,
ப/கலபிடகந்த த.வித்.,
பள்ளகெடுவ.

எஃப்.அஸ்மியா,
தரம் - $10A^T$,
ஸாஹிரா கல்., கம்பளை.

எஸ்.வினோதர்ஷன், தரம் - $9^A$,
நு/தலவாக்கலை த.ம.வித்.,
தலவாக்கலை.

## ஆங்கிலச் சொல்லை எழுதுக — 2







**தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்**

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2009.04.01 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 201**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## சரியான விடையில் கீறிடுங்கள் — 3

1. வயலும் வயல் சார்ந்த இடமும்;
   (நெய்தல்/ மருதம்/ குறிஞ்சி)
2. போர்த்துக்கேய மொழிச் சொல்லொன்று;
   (அன்னாசி/ பராக்கு/ தோரணம்)
3. பனையின் இளங்காய்;
   (வடலி/நுங்கு/குரும்பை)
4. பல்லி-சொல்லும் என்பது போல தவளை;
   (கதறும்/இரையும்/கத்தும்)
5. ESA என்பது;
   (அமெரிக்க விண்வெளி நிலையம்/ ஐரோப்பிய விண்வெளி முகவர் நிலையம்/ இந்திய விண்வெளி அமைப்பு)
6. அமெரிக்காவின் தற்போதைய ராஜாங்க செயலாளர்;
   (மிச்சேல் க்ரூஸ், ஹிலரி க்ளின்டன், கொன்டலீசா ரைஸ்)

## ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுக — 1



## கணக்குப் புதிர் — 4

1. 1, 2, 3 ஆகிய எண் வரிசையை மாற்றி மாற்றி அமைக்க வேண்டும்.
   * மொத்தம் எத்தனை வரிசைகள் வரும்?
   ** வரிசைகளின் அமைப்பினை எழுதிக் காட்டுங்கள்.
2. கீழே குறிப்பிட்டுள்ள மூன்று எண்களுக்கிடையேயும் பொருத்தமான கணிதக் குறியீட்டை எழுதுங்கள்.

   16 4 3 = 7

## போட்டிகளில் பங்குபற்றுவோருக்கு ஓர் அன்பான வேண்டுகோள்!

நீங்கள் அறிவுக்கு விருந்து போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளாக விரும்புகிறீர்களா? அப்படியாயின், போட்டிகளுக்கான விடைகளை எழுதி அனுப்பும்போது **உங்கள் பெயர், வீட்டு முகவரி, கற்கும் பாடசாலை, தரம், பாடசாலை முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம்** என்பனவற்றை தெளிவாக எழுதி, விடைகளை **தபாலட்டையில்** மாத்திரம் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள். அத்துடன், மேற்குறிப்பிட்ட விபரங்களை எழுதி அனுப்புபவர்கள் மாத்திரமே பரிசுக் குலுக்களில் இணைத்துக் கொள்ளப்படுவதோடு, உங்களுக்குரிய பரிசுகளை காலதாமதமின்றி உரிய முறையில் அனுப்பி வைக்க இது வசதியாக இருக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

## அறிவுக்கு விருந்து 198 விடைகள்

**போட்டி - 03**

| (A) | (B) |
|---|---|
| (அ) Custard-apple | 1. விளக்கமறியல் |
| (ஆ) Wood-apple | 2. வேட்புமனு |
| (இ) Fig | 3. கத்தரிக்கோல் |
| (ஈ) Pear | 4. மூலதனம் |
| | 5. நீடூழி வாழ்க |
| | 6. தப்பித்தவறி |

**போட்டி - 04**

* 48 நாட்கள் (240÷5)
* 10 ரூபாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# போர் நிறுத்தத்தின் முடிவு

போர்த்துக்கேயருக்கும் ஒல்லாந்தருக்குமிடையே ஏற்பட்ட போர்நிறுத்தம் இலங்கையில் கி.பி 1652 இல் முடிவுக்கு வந்தது. அவர்களிடையே மீண்டும் யுத்தம் ஆரம்பமானது. கோட்டைகளைக் கைப்பற்ற ஒல்லாந்தர்கள் தாக்குதல்களை நடத்தினர். அந்தத் தாக்குதல்களுக்கு முகம் கொடுப்பதில் போர்த்துக்கேயர்கள் தோல்வி அடைந்து பின் வாங்கினர்.

அதனால், பல கோட்டைகளை ஒல்லாந்தர்கள் கைப்பற்றினர். இறுதியில் கொழும்பையும் தாக்கினர். ஆனால், அது இலகுவான காரியமாக இருக்கவில்லை. காரணம் கொழும்பு போர்த்துக்கேயரின் பிரதான பாதுகாப்புக் கோட்டையாக இருந்ததே. நூறு வருடங்களுக்கு மேலாக கொழும்பு போர்த்துக்கேயர் வசம் இருந்ததும் மற்றொரு காரணமாகும். அது 'பஸ்டியன்' எனும் வெளிப்பாதுகாப்பு கட்டமைப்பு வலயங்களைக் கொண்டிருந்தது. வடதிசையில் பெரும் குடா இருந்தது. மேற்குப் பகுதியில் பெருங்கடல் விரிந்திருந்தது. தென் திசையோ குளத்தால் பாதுகாக்கப்பட்டது. எனவே, கிழக்கு திசையில் இருந்து (நிலப்பகுதியூடாக) தரைமார்க்கமாக எதிரிகள் தாக்க வாய்ப்பிருந்தது.

ஆனால், அந்த தரைமார்க்கமோ புனித ஜோன், புனித ஸ்டீவன் மற்றும் புனித செபஸ்தியன் எனும் மூன்று பாதுகாப்பு அரண்களால் பலப்படுத்தப்பட்டிருந்தன.

நகருக்குள் பிரவேசிக்கும் கோட்டையின் நுழைவாயில் 'புனித ஜோன்' பாதுகாப்பு அரணுக்கருகில் இருந்தது. அந்த இடம் இப்பொழுது 'கைமன் வாயில்' அல்லது 'கைமன் வாசல்' என அழைக்கப்படுகின்றது. புனித ஜோன் வீதி எனும் ஒழுங்கை இன்றும் அதே பெயரில் அழைக்கப்படுகின்றது. அதன் வாயில் வழியாக நீர்கொழும்புத் திசையை நோக்கிச் செல்லமுடியும். புனித செபஸ்தியன் அரணிற்கருகில் மற்றொரு வாயில் இருந்தது. அரசியின் வாயில் அல்லது ராணி வாயில் என அதனை அழைத்தனர். அதன்மூலம் கோட்டையை நோக்கிச் செல்லும் பாதையை அடைய கட்டப்பட்டுள்ள பாலத்திற்குச் செல்லலாம். இன்றுள்ள பிரதான வீதி (Main Street) மற்றும் நொரிஸ் வீதி (ஒல்கொட் மாவத்தை) ஆகியனவும் கொழும்பை அடையப் பயன்படுத்தும் இரண்டு பிரதான பாதைகளாகும். இவை அன்றும் இருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்.





# இலங்கையில் கருமைநிற சிறுத்தை கண்டுபிடிப்பு!

மிருகங்களை நேசிக்கின்ற பலருக்கு அண்மையில் மிகவும் கவலைக்குரிய ஒரு செய்தியை அறியமுடிந்தது. ஆம்! இலங்கையின் 'சிங்கராஜா' வனத்தையொட்டிய தெனியாய மாவுல்தெனிய என்ற பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகள் அமைத்திருந்த கட்டுத்துவக்கில் சிக்கிய சிறுத்தைப் புலியொன்று பரிதாபகரமாக இறந்த செய்தியே அது. இந்த சிறுத்தைப் புலியானது கருமை நிறத்தில் இருந்தமையே அதன் சிறப்பு அம்சம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சம்பவத்தைக் கேள்வியுற்றதையடுத்து இதுபற்றி கருத்துத் தெரிவித்த புலிகள் சம்பந்தமான ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்ற ஆய்வாளர்கள் 'இதனைப் போன்றவோர் சிறுத்தைப் புலியை இதற்கு முன்னர் தாம் கண்டதில்லை'' என்று குறிப்பிட்டுள்ளனர். அதே வேளை, இந்த சிறுத்தைப் புலியின் இறந்த உடலை ஆரம்பகட்ட பரிசோதனைக்கு உட்படுத்திய அவர்கள் இன்னும் பல தகவல்களையும் வெளியிட்டுள்ளனர். அதன்படி, மரணமடைந்த சிறுத்தைப் புலியானது $2^{1/2}$ அடி உயரத்தையும் $6^{1/2}$ அடி நீளத்தையும் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தனர்.

'சிங்கராஜா' வனத்தையொட்டிய ஹேராட்டன் தென்ன என்ற பகுதியில் இத்தகைய கறுப்புநிற சிறுத்தைப் புலிகள் நடமாடுவதாக அண்மைக்காலமாக செய்திகள் பரவியிருந்ததையும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். மரணமடைந்த சிறுத் தைப் புலியின் உடல் முழுமையான பரிசோதனைக்காக உடவலவிலுள்ள விலங்குகள் ஆய்வுகூடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இப்பரிசோதனையின்படி இந்த சிறுத்தைப் புலியானது எதிர்பாராத விதமாக சருமநிறமாற்ற வியாதிக்கு ஆளாகியிருக்கலாம் என்றும் அதன் காரணமாகவே அது கருமை நிறமாக மாறியிருக்கலாம் என்றும் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், இந்தக் கருமை நிற சிறுத்தைப் புலி சம்... மாக டீ.என்.ஏ.பரிசோ... நடத்தப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கையிலுள்ள சிறுத்தைப் புலிகள்

**இலங்கையில் பல வனாந்தரப் பகுதிகளில் புலிகள், சிறுத்தைப் புலிகள் காணப்படுகின்றன. இதில் சிறுத்தைப் புலிகளில் சருமத்தில் கருமை நிறத்திலான புள்ளிகள் இருப்பதைக் காணலாம்.**






- **மலைப்பாங்கான பகுதிகளிலும் செடி கொடிகள் அடர்ந்துள்ள பகுதிகளிலும் இவை வெகு லாவகமாக விரைவாக ஓடும் தன்மையைக் கொண்டிருப்பது இவற்றின் சிறப்பாகும். அதனால், இது வேட்டைக்கு பேர் போன விலங்காகவும் கருதப்படுகின்றது. முயல், குரங்கு மற்றும் சிறிய விலங்குகள் இவற்றிற்கு விரைவாக இரையாகின்றன.**
- **மனிதர்கள் காட்டு மரங்களை அழித்து வருவதனால் இத்தகைய விலங்குகள் வசிப்பிடமின்றி அல்லலுற்று வருகின்றன.**




Source: Wikipedia




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2009, மார்ச் மாதம் 25 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday March 25, 2009.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org